வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 15.10.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 314 | பக்கங்கள் : 16

## சம்பந்தனின் காலத்தின் பின்

# தமிழ் கூட்டமைப்புக்கு கூட்டு தலைமையே!

## பங்காளி கட்சியான ரெலோ தலைவர் செல்வம்!

மன்னார், ஒக்ஸ்ட் 15

சம்பந்தனின் காலத்தின் பின் கூட்டுத்தலைமையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயல்படும். சுமந்திரனின் தனிப்பட்ட கருத்தை பெரிய விடயமாகப் பார்க்கத் தேவையில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். 15



## 673 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

கொழும்பு, ஒக். 15

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 673 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 29 ஆயி 15

## கொரோனா தொற்றால் மேலும் 21 பேர் மரணம்

கொழும்பு, ஒக். 15

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 21 பேர் உயிரிழந்தனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 15

## ரிஷாத் பிணையில் விடுதலை

கொழும்பு, ஒக். 15

பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் சிறுமி ஹிஷாலினியின் மரணம் தொடர்பில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு நேற்று பிணை வழங்கப்பட்டது.

இருவேறு வழக்குகளில் தனித்தனியாக அவ 15

## ஈரான் கைதிகள் தற்கொலை முயற்சி இருவர் மரணம்; 10 பேர் சிகிச்சையில்!

கொழும்பு, ஒக். 15

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈரானிய சிறைக் கைதிகள் தற்கொலைக்கு முயன்றனர். இதில் இரு கைதிகள் உயிரிழந்தனர். 10 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தொற்றுநீக்கி திரவத்தை அருந்தியே இவர்கள் தற்கொலைக்கு முயன்றனர் என்று சிறைச்சாலை பேச்சாளர் தெரிவித்தார்.

மேலும், தற்கொலைக்கு முயன்ற 15

## கொரோனாவுக்கு கிளிநொச்சியில் இருவர் மரணம்!

கிளிநொச்சி, ஒக். 15

கிளிநொச்சியில் உயிரிழந்த மூதாட்டிகள் இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக் கழக ஆய்வுகூடத்தில் நேற்று நடத்தப்பட்ட பரிசோதனையிலேயே உயிரிழந்த இருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

நாகேந்திரம் - தர்மலக்சுமி (வயது 84) மற்றும் சிவநேசன் - கண்மணி (வயது-75) என்போரே இவ்வாறு உயிரிழந்தனர். இவர்கள் இருவரின் மாதிரிகளும் கிளிநொச்சி பொது மருத்துவமனையால் வழங்கப்பட்டது. (ஐ)



## சுகாதார வழிகாட்டலில் இன்று முதல் தளர்வுகள்

கொழும்பு, ஒக். 15

இன்று வெள்ளிக்கிழமை முதல், திருமணங்கள், இறுதி சடங்குகள், உணவகங்கள், கூட்டங்கள், கருத்தரங்குகளுக்கான சுகாதார வழிகாட்டுதல்கள் மேலும் தளர்த்தப்படுகின்றன.

புதிய தளர்வுகளுடனான சுகாதார வழிகாட்டலை நேற்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டார்.

இதன்படி, திருமண மண்டபத்தில் அனுமதிக் 15

## அரசின் அசமந்தப்போக்கால் மீனவர்கள் பெரிதும் பாதிப்பு

### சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 15

நாட்டில் அரசின் அசமந்தப் போக்கால் மீனவர் சமூகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர், கடற்றொழிலாளர்களின் பிரச்னைகளை ஆராயும் நேற்றைய சுற்றுப்பய 15

## ஆசிரியர்களின் போராட்டம் தொடரும் 21ஆம் திகதிவரை அரசுக்கு காலக்கெடு!

கொழும்பு, ஒக். 15

"அதிபர் - ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு தெளிவான தீர்வு திட்டம் அவசியம். எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்." - என்று இலங்கை ஆசிரியர் சங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்படி சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின், இவ்வாறு அரசாங்கத்துக்கு 15



# பொலிஸார் தப்பவிட்டவர்களில் ஒருவர் கைது; மற்றொருவர் சரண்!

யாழ்ப்பாணம், ஒக். 15

ஏழாலையில் வீடொன்றுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியவர்களை பொலிஸார் தப்பிக்கவிட்ட நிலையில் ஒருவர் மீளவும் கைது செய்யப்பட்டார். மற்றொருவர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் சரணடைந்துள்ளார் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனரென என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வட பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்தார்.

ஏழாலையில் கடந்த 4ஆம் திகதி இரவு வீடொன்றினுள் புகுந்த சிலர் அங்கிருந்தவர்களை தாக்கினர். தாக்குதல் மேற்கொண்டவர்களில் இருவர் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். எனினும், பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் பின்னர் தப்பித்தனர்.

அவர்களை பொலிஸாரே விடுவித்தனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முறைப்பாடு செய்யப்பட்டது. இது தொடர்பான விசாரணையில், வீட்டில் தாக்குதல் நடத்த வந்தவர்களை மூன்று நாள்களுக்குள் கைது செய்வதாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிப்பதாகவும் சுன்னாகம் பொலிஸார் பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் தெரிவித்தனர்.

இந்த நிலையில் சந்தேக நபர்களில் ஒருவர் சுன்னாகம் பொலிஸாரினால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். மற்றைய சந்தேக நபர் தனது சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் சரணடைந்தார் என்று பொலிஸாரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் இருவரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் கையொப்பமிட வேண்டும் என்ற நிபந்தையுடன் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ஐ)

## மரண அறிவித்தல்



மலர்வு 18 - 01 - 1940

உதிர்வு 12 - 10 - 2021

### திருமதி சீவரட்ணம்மா வேலுப்பிள்ளை (ராசாத்தி)

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கனடா Ajax ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சீவரட்ணம்மா வேலுப்பிள்ளை அவர்கள் 12.10.2021 செவ்வாய்க்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற செல்லையா, செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், ஜெயபவன்(ஜெயா) அவர்களின் அன்புத் தாயாரும், அருட்செல்வி(செல்வி) அவர்களின் அன்பு மாமியாரும், துளசி, அருண், யாதவன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், நாகரட்ணம்மா, விஜயரட்ணம்மா, வில்வராசா, பாலசுப்பிரமணியம் மற்றும் தம்பிராசா(கனடா), மகேந்திரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

பார்வைக்கு
Sunday, 17 Oct 2021 8:00 AM - 11:00 AM (கனடா நேரம்)
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Monday, 18 Oct 2021 2:00 PM - 5:00 PM (கனடா நேரம்)
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Monday, 18 Oct 2021 5:00 PM - 5:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**ஜெயா (மகன்) : + 14168185335**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# பெண் எரிந்து பலி; கணவன் கைது!

வவுனியா, ஒக். 15

வவுனியாவில் தீயில் எரிந்து பெண் ஒருவர் மரணமடைந்தார். இந்த சம்பவத்தில் சந்தேகத்தில் மரணமான பெண்ணின் கணவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று காலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

வவுனியா, கற்பகபுரம், நான்காம் ஒழுங்கையில் வீட்டிலிருந்து புகை வெளிவந்ததைத் தொடர்ந்து அயலவர்கள் அங்கு சென்றனர். அப்போது வீட்டின் அறை ஒன்றில் அந்த வீட்டில் வசித்த பெண் தீயில் எரிந்துகொண்டிருந்தார்.

இதையடுத்து அயலவர்கள் கதவை உடைத்து தண்ணீர் ஊற்றி தீயை அணைக்க முயன்றனர். ஆனால், பெண் முற்றாகத் தீயில் எரிந்து மரணமானார்.

இந்த சம்பவத்தின்போது அவரின் மகனான சிறுவன் மலசலகூடத்திற்குள் வைத்து வெளிப்பக்கமாக பூட்டப்பட்டிருந்தார்.

விசாரணையின் பின்னர் உயிரிழந்த பெண்ணின் கணவரை பொலிஸார் கைது செய்தனர். (ஐ)

# வடக்கில் நேற்று 25 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ். போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று 120 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 25 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி, யாழ். போதான மருத்துவமனையில் 5 பேர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 3 பேர், சாவகச்சேரி மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேர், சங்கானை பிரதேச மருத்துவமனையில் ஒருவர், காங்கேசன்துறை கடற்படை முகாமில் 2 பேர் என 15 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

வவுனியா மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேர், வவுனியா பொது மருத்துவமனையில் ஒருவர் என வவுனியா மாவட்டத்தில் 6 பேரும், கிளிநொச்சி பொது மருத்துவமனையில் 2 பேர், முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் ஒருவர், முல்லைத்தீவு விமானப்படை முகாமில் ஒருவரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். (ஐ)

# பளை விபத்தில் இருவர் படுகாயம்!

எதிரெதிரே வந்த இலங்கை மின்சார சபை வாகனமும் ஓட்டோவும் மோதிய விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

பளை - முல்லையடியில் நேற்று மதியம் 1.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது. வாகனமொன்றை மின்சார சபை வாகனம் முந் திச்செல்ல முயன்றபோதே விபத்து நேர்ந்தது. படுகாயமடைந்த இருவரும் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## கல்வி TV CHANNEL-1

**15.10.2021**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

## கல்வி TV CHANNEL - 2

**15.10.2021**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | சிங்களம் |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | சிங்களம் |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
15.10.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# கூட்டமைப்பின் அடுத்த தலைமை?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்த தலைமைத்துவம் தொடர்பான கேள்வி அவ்வப்போது கண்சிமிட்டி மறைகின்றது. யார் அடுத்த தலைவர் என்னும் கேள்விக்கு எவரிடமுமே சரியான பதில் இல்லை. இதற்கு என்ன காரணம்? தற்போது கூட்டமைப்பின் தலைவராக இருக்கின்ற இரா. சம்பந்தனுடன் ஓரளவு ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய நிலையில்கூட, கூட்டமைப்பிற்குள் எவரும் இல்லை. கூட்டமைப்பிற்கு வெளியிலும் இல்லை. சம்பந்தனின் அரசியல் அணுகுமுறைகள் தொடர்பில் விமர்சனங்களை முன்வைப்பவர்கள்கூட, ஒரு விடயத்தை மறுப்பதில்லை. அதாவது, சம்பந்தன் ஒப்பீட்டடிப்படையில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவராக இருக்கின்றார்.

இதன் காரணமாகத்தான், பல்வேறு முரண்பாடுகள் இருக்கின்றபோதிலும்கூட, அவரின் தலைமையின் கீழ் அனைவரும் ஒன்றுபட்டு பயணிக்க முடிகின்றது. இதுவரை கூட்டமைப்பு, கூட்டமைப்பாக தொடர்வதற்கு சம்பந்தன் என்னும் ஒரு தனிநபர்தான் காரணம். சம்பந்தன், தமிழ் அரசு கட்சியின் தனித்துவம் தொடர்பில் பேசிக்கொண்டாலும்கூட, ஏனையவர்களை அவமானப்படுத்தும் வகையில் எந்தவொரு கருத்தையும் கூறியதில்லை. துரோகி - காட்டிக் கொடுப்பு - ஒட்டுக்குழு - இப்படியான சொற்களை சம்பந்தன் தவறியும் உச்சரித்ததில்லை. பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் சம்பந்தனுடன் ஒத்துப் போவதற்கு இதுவும், ஒரு பிரதானமான காரணமாகும்.

இந்த நிலையில்தான், சம்பந்தனுக்கு பின்னரான காலத்தில் கூட்டமைப்பு நிலைக்குமா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. கூட்டமைப்பின் தலைவராக வருவதற்கு எவரும் ஆசைப்படலாம். ஆனால், அவ்வாறு ஆசைப்படுபவர்கள், பங்காளிக் கட்சிகளை சமத்துவத்தோடும் கௌரவத்தோடும் அவரணைத்து செல்வதற்கு தகுதியானவரா என்பதுதான் அடிப்படையான கேள்வி. உண்மையில் சம்பந்தனுக்கு பின்னர், ஒரு தனிநபர் தலைமைத்துவத்தின் கீழ் கூட்டமைப்பு சீவிப்பது இயலாத காரியம். அவ்வாறு சீவிப்பதாயின், பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் தங்களின் கௌரவம், தன்மானம் அனைத்தையும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் காலடியில் சமர்ப்பணம் செய்ய வேண்டும். அதற்கு அவர்கள் தயாராக இருந்தால் இதில் சிக்கல்கள் ஏற்படாது.

மற்றும்படி ஒரு தனிநபர் தலைமைத்துவத்தின் கீழ் கூட்டமைப்பு இயங்குவதற்கான வாய்ப்பில்லை. இந்த அடிப்படையில் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கூறும் விடயம் சரியானது. அதாவது, ஒரு கூட்டு தலைமைத்துவத்தின் கீழ் கூட்டமைப்பை முன்கொண்டு செல்வது. ஆனால், அப்படியான கூட்டு தலைமைத்துவத்திற்கு இலங்கை தமிழ் அரசு கட்சி உடன்படுமா? உடன்பட மறுத்தால் - ரெலோவும் புளொட்டும் என்ன முடிவை எடுக்கும்? எவ்வாறு கூட்டமைப்பை முன்கொண்டு செல்வர்?

கூட்டமைப்புக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ் இனத்திற்கும் இன்று ஒரு கூட்டுத் தலைமைத்துவம்தான் சரியானது. ஏனெனில், இன்றைய சூழலில், தனித்து தமிழ் மக்களுக்கு தலைமைத்துவம் வழங்கக்கூடிய நிலையில், எந்தவோர் ஆளுமையான தனிநபரும் இல்லை - கட்சியும் இல்லை. ஏனெனில், ஒவ்வொருவரும் ஒரு குழுவாத கட்சியின் தலைவராகவே இருக்கின்றனர். பரந்துபட்ட மக்களை பிரதிநித்துவம் செய்யக்கூடிய வல்லமையுள்ள தலைவர்களாக எவருமே தங்களை இதுவரையில் நிரூபிக்கவில்லை. தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறுகின்ற கட்சிகள் அனைத்துமே ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டுமே வாக்குகளை பெறக்கூடிய நிலையில்தான் இருக்கின்றன. இணைந்த வடக்கு - கிழக்கு தொடர்பில் இவர்கள் பேசிக் கொண்டாலும்கூட, வட, கிழக்கு தழுவிய நிலையில் எந்தவொரு கட்சிக்கும் வலுவான மக்கள் ஆதரவுத்தளம் இல்லை.

நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலின்போது, ஒவ்வொரு கட்சிகளும் பெற்ற வாக்குகளே இதற்குச் சான்று. அதேவேளை அரச ஆதரவு தமிழ் கட்சிகள் பெற்றிருக்கும் வெற்றியும் தேசியவாத கட்சிகளின் பலவீனத்திற்கு தெளிவான சான்று. இந்த நிலையில் ஒரு வலுவான ஐக்கிய முன்னணியாக மாறுவதுதான் இன்றைய நிலையில் தமிழ்த் தேசியத்தை பாதுகாப்பதற்கு ஒரே வழியாகும். இதனையே ஈழநாடு தொடர்சியாக வலியுறுத்தி வருகின்றது. மக்களின் நலனில் அக்கறை இருந்தால் கூட்டுத் தலைமையாக எழுச்சியுறுவதில் எந்தவொரு தடையும் இருக்கப்போவதில்லை. மக்களின் நலனை விடவும் கட்சிகளின், தனிநபர்களின் நலன் முக்கியமென்று எண்ணினால், கூட்டுத் தலைமை என்பது ஒரு நல்ல கனவாகவே மிஞ்சும்.

# ஆட்டிசத்தை அறிய ஓர் அரிய வழி!

**மருத்துவர் கு. கணேசன்**

மனித மூளையில் இதுவரை அறியப்படாத செயலாக்கத்துக்கும் செயலிழப்புக்கும் காரணம் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சிகள் உலகளவில் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. மூளையின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் புரதங்களையும், அந்தப் புரதங்களை நம் உடலில் தயாரிப்பதற்கு வழிகாட்டும் மரபணுக்களையும் கண்டுபிடித்திருப்பது இந்த முன்னேற்றத்துக்கு ஒரு நல்ல உதாரணம்.

இந்த ஆராய்ச்சிகளின் நீட்சியாக, அந்த மரபணுக்களில் ஏற்படும் பிழைகளைக் கண்டுபிடித்து, அவை உண்டாக்கும் அரிய நோய் களைத் தடுக்கும் முயற்சிகளும் அறியப்பட்டு வருகின்றன. அப்படியான முயற்சிகளுள் ஒன்றுதான் ஆட்டிசம் பாதிப்பை அறிய உதவும் நவீன மரபணுப் பரிசோதனை (DNA test).



ஆட்டிசம் என்பது குழந்தைகளைப் பாதிக் கிற மூளை நரம்பு வளர்ச்சி சார்ந்த குறைபாடு களில் ஒன்று. இந்தியாவில் தற்போது சுமார் 22 இலட்சம் பேருக்கு ஆட்டிசம் உள்ளது. இது மொழித் திறன், பேச்சுத் திறன், கற்றல் திறன், ஒருங்கிணைப்புத் திறன் போன்ற செயல்பாடுகளை வெகுவாகப் பாதிக்கிறது. இது குழந்தையின் மரபணுவில் தோன்றும் பிழையால் ஏற்படுகிறது. நெருங்கிய உறவில் திருமணமான பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு இது ஏற்பட அதிக வாய்ப்பு உண்டு. தாமதமான திருமணமும், தாமதமான குழந்தைப் பேறும் இந்தக் குறைபாட்டுக்கு வழிதருகின்றன.

ஆட்டிசம் ஏற்படுவதற்கு முக்கியக் காரணமாகக் கருதப்படுவது ‘ஃபிரஜைல் எக்ஸ் நோயியம்’ (Fragile X syndrome – FXS). இந்தக் குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு வயதுக்கு ஏற்ப மூளை வளர்ச்சி இருக்காது. முக்கியமாகத் தவழ்வது, உட்காருவது, முகம் பார்த்துச் சிரிப்பது, கை தட்டுவது, புதிய வார்த்தைகளைப் பேச முயற்சிப்பது போன்ற பல வளர்ச்சிப் படிகள் மற்ற குழந்தைகளோடு ஒப்பிடும்போது தாமதப்படும்.

‘எவ். எம். ஆர். 1’ (FMR1) மரபணுவில் ஏற்படும் மாற்றங்களே ஃபிரஜைல் எக்ஸ் நோயியத்துக்குக் காரணம். உடலில் ‘எவ். எம். ஆர். பி’ (FMRP) எனும் புரதத்தைத் தயாரிக்க இந்த மரபணு தேவைப்படுகிறது. ‘எவ். எம். ஆர். பி’ புரதத்தின் முக்கிய வேலை, சிறு வயதில் மூளை வளர்ச்சியைத் தூண்டுவது. பிழையுள்ள ‘எவ். எம். ஆர். 1’ மரபணுக்களால் ‘எவ். எம். ஆர். பி’ புரதத்தைத் தயாரிக்க முடிவதில்லை. ஆகவேதான், ஃபிரஜைல் எக்ஸ் நோயியம் ஏற்படுகிறது.

இந்த நோயியத்தை 1991இல் அமெரிக்காவைச் சேர்ந்த பென் ஊஸ்ட்ரா, டேவிட் நெல்சன், ஸ்டீபன் வாரன் எனும் மரபணு வல்லுநர்கள் கண்டுபிடித்தனர். இதற்கு ‘ஃபிராக்ஸா’ (FRAXA) என்று பெயரிட்டனர். அது மட்டுமல்லாமல், இந்த நோயியம் உள்ள குழந்தைகளுக்குத்தான் ஆட்டிசம் பாதிப்பு அதிகம் என்றும் தெரிவித்தனர். சமீபத்திய புள்ளிவிவரம் ஒன்று உலகில் 4வீதம் பேருக்கு ஆட்டிசம் ஏற்படுவதற்கு ‘ஃபிரஜைல் எக்ஸ் நோயியம்’தான் முக்கியக் காரணம் என்கிறது. அமெரிக்காவின் ‘சி. டி. சி’ கொடுத்துள்ள புள்ளிவிவரப்படி, 7,000 ஆண்களில் ஒருவருக்கும் 11,000 பெண்களில் ஒருவருக்கும் இந்த நோயியம் இருக்கிறது.

259 பெண்களில் ஒருவரும் 800 ஆண்களில் ஒருவரும் பிழையுள்ள ‘எஃப்எம்ஆர்1’ மரபணுவைச் சுமந்துள்ளனர். இந்தப் பெண்கள், தங்கள் வாரிசுகளில் பாதிப் பேருக்கு இதே மரபணுவைக் கடத்திவிடுகின்றனர். அந்த வாரிசுகள் ஃபிரஜைல் எக்ஸ் நோயியம் உள்ளவர்களாகவோ, அந்த நோயியத்தைக் கடத்துபவர்களாகவோ இருக்கின்றனர். ஆண்களுக்கு இந்த மரபணு இருந்தால், மகள்களுக்கு இதைக் கடத்துகின்றனர் மகன்களுக்குக் கடத்துவதில்லை.

ஆட்டிசம் பாதிப்பை அறிய நேரடிப் பரிசோதனைகள் இல்லை. பயனாளியின் நடத்தைகளைக் கொண்டுதான் அறிய முடியும். ஆனால், ‘ஃபிரஜைல் எக்ஸ் நோயியம்’ இருப்பதை ரத்தத்தில் ‘எவ். எம். ஆர். 1’ மரபணு இருக்கிறதா என்பதைப் பரிசோதித்து அறியலாம். இதன் மூலம், அவருக்கு அல்லது அவரின் வாரிசுகளுக்கு ஆட்டிசம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்பதை அறியலாம். இந்த இரண்டுக்கும் சிகிச்சை இல்லை என்பதால், தடுப்பு ஒன்றுதான் இவற்றுக்குத் தீர்வு. அதிலும் ஆட்டிசக் குழந்தைகளுக்கு மூன்று வயதுக்குள் பேச்சு, கற்றல் சார்ந்த பயிற்சிகளைத் தொடங்க வேண்டியது கட்டாயம். அப்போதுதான் அவர்களின் நடத்தை சார்ந்த அணுகுமுறைகளில் முன்னேற்றம் இருக்கும்.

இதற்கு, பெண்கள் கர்ப்பமாகும்போது ‘டவுன் நோயியம்’ போன்ற மரபணு நோய்களுக்கான பரிசோதனைகளுடன் ‘எவ். எம். ஆர். 1’ மரபணுப் பரிசோதனையையும் வழக்கப்படுத்தினால், ஆட்டிசம் வருவதற்கு உள்ள வாய்ப்பை முன்னரே அறியலாம். அதைத் தொடர்ந்து, பெண்களிடம் உறவு முறையில் திருமணம் செய்வதைத் தடுப்பது போன்ற விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதன் பரவலைத் தடுக்கலாம். ஆட்டிசக் குழந்தைகளுக்கு ஆரம்பத்திலேயே மூளை நரம்பு சார்ந்த பயிற்சிகளை அளிக்கத் தயார்ப்படுத்தலாம். அதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரம் கூடுவதற்கு உதவலாம்!

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஒக்ரோபர் - 15 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம் - புரட்டாதி 29
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : தசமி



## இன்றைய ராசிபலன்

15.10.2021

**மேடம்**
நண்பர்கள், குடும்பத்தினரால் கூடுதல் நன்மை கிடைக்கும் நாள். கொள்கைப் பிடிப்பைத் தளர்த்திக்கொண்டு செயல்படுவீர்கள். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பயணம் லாபம் தரும்.

**இடபம்**
பணியிடத்தில் உங்களுக்கு பாராட்டு கிடைக்கும். மகிழ்ச்சி கூடும். பணியிட மாற்றம் பற்றி சிந்திப்பீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். பேச்சிலும் செயலிலும் இன்று மிகுந்த கவனம் தேவை.

**மிதுனம்**
யாரைப் பற்றியும் யாரிடமும் புறம்கூற வேண்டாம். நீங்கள் உண்டு உங்கள் வேலை உண்டு என்றிருந்தால் பிரச்னை இருக்காது. முன்னேற்றம். பொறாமைக்காரர்களைப் புறக்கணியுங்கள்.

**கடகம்**
குடும்ப ஒற்றுமையை காக்க எடுத்த முயற்சிகள் கைகூடும். முன்பு கண்ட நல்ல கனவுகள் இப்போது மெய்ப்பட ஆரம்பிக்கும். கோபதாபங்களைக் குறைத்து மற்றவர் அன்புக்குப் பாத்திரமாவீர்கள்.

**சிம்மம்**
பிரிந்தவர்களை சேர்த்து வைக்க எடுத்த முயற்சி பலிக்கும். சம்பாதிப்பதில் நாட்டம் அதிகரிக்கும். பொதுசேவை செய்வீர்கள். குழந்தைகளின் செயல் உங்களை சந்தோஷப்பட வைக்கும்.

**கன்னி**
தவறான பாதைக்கு அழைக்கும் நண்பர்களை விலக்குங்கள். தொழில், பணியில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். கலைத்துறையில் ஈடுபாடு ஏற்படும். மனமகிழ்ச்சி உண்டு.

**துலாம்**
எதிர்பார்ப்பு இல்லாமல் நண்பர்கள் உங்களுக்கு நன்மை செய்வர். உங்களுக்கு கீழ் வேலை செய்பவர்களின் ஒத்துழைப்பு அதிகமாகும். சகோதரர்களின் பாராமுகம் வருத்தமளிக்கும். நிதி உயரும்.

**விருட்சிகம்**
பணியிட வளர்ச்சி கூடும். வழக்குகள் சாதகமாகும். பயம் தீரும். அக்கம்பக்கத்தினருக்கு உதவி செய்ய வேண்டிய நிலை ஏற்படும். நீங்கள் நினைத்த விஷயம் ஒன்று நிறைவேற வாரிசுகள் உதவுவர்.

**தனுசு**
பெரிய மனிதர்களின் ஆதரவு பிரச்னைகளை குறைக்கும். உங்களின் செயல் பெற்றோருக்கு நெகிழ்ச்சி அளிக்கும். வாழ்க்கைத்துணை வழி உறவினர்களுடன் ஒட்டுதல் ஏற்படும்.

**மகரம்**
களைப்பு காரணமாக கடமை தவற வேண்டாம். அக்கம்பக்கத்தினர் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவார்கள். பண விஷயத்தில் நெருங்கியவர்களிடமும் கவனம் தேவை.

**கும்பம்**
பிறருக்கு நன்மை செய்வதாக நினைத்து சங்கடத்தில் மாட்ட வேண்டாம். தவறு ஒன்றை மீளுவீர்கள். மன பயம் நீங்கும். பணி யில் ஏற்படும் முன்னேற்றத்தால் பிறர் பொறாமையடைவர்.

**மீனம்**
மிக நெருக்கமான ஒருவரின் சிரமம் பற்றி கவலை தீரும். மனக்குறை ஒன்று நீங்கும். சூழ்நிலைக்கு ஏற்ப செயல்படுவீர்கள். மற்றவருக்கு கற்பிப்பதன் மூலம் வருமானம் உண்டு.

# எம்.ஜி.ஆர், ஜெயலலிதா நினைவிடங்களுக்கு நாளை அஞ்சலி செலுத்த செல்கிறார் சசிகலா

## பாதுகாப்பு கேட்டு காவல் ஆணையாளருக்கு மனு

சென்னை, ஒக். 15

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, ஆகியோரின் நினைவிடங்க ளுக்கு நாளை சசிகலா செல்ல உள்ள நிலையில் பாதுகாப்பு கேட்டு சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் அவரின் சார்பில் மனு அளிக்கப்பட்டுள்ளது.

சொத்துக்குவிப்பு வழக்கில் சிறை தண்டனை பெற்ற பிறகு கடந்த ஜனவரி மாதம் சிறையில் இருந்து வெளியே வந்த சசிகலா தீவிர அரசியலில் ஈடுபடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அரசியலில் இருந்து விலகுகிறாரென அவர் அறிவித்தார்.

எனினும் அ.தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் தனது ஆதரவாளர்களிடம் தொடர்ந்து தொலைபேசியில் சசிகலா பேசி வந்தார். அவர் பேசும் ஒலிப் பதிவுகள் வெளியாகி அ.தி.மு.க. வட்டாரத்தில் அதிர்வலைகளை



ஏற்படுத்தி வந்தது.

தொண்டர்களின் விருப்பப் படி கட்சியை மீட்டெடுப் போம் என்று கூறிவந்தார். இந்நிலையில் நாளை மறுதினம் அ.தி.மு.கவின் பொன்விழா கொண்டாட்டம் நடைபெற உள்ளது. இந்த சூழலில் நாளை சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா, எம்.ஜி. ஆர். மற்றும் ஜெயலலிதா நினைவிடங்களில் சசிகலா மலர்தூவி மரியாதை செலுத்த உள்ளார்.

இதற்காக அ.ம.மு.க. சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சசிகலாவுக்கு திரண்ட வரவேற்பு அளிக்க வேண்டும் என்பதால் சென்னை சுற்றுவட்டாரத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்ட செயலாளரும் தொண்டர்களை அழைத்து வர வேண்டுமென அ.ம.மு.க. துணை பொதுச் செயலாளர் செந்தமிழன் கடந்த ஒக்ரோபர் 10ஆம் திகதி நடைபெற்ற மா.செ.க்கள் கூட்டத்தில் தெரி வித்தார்.

இந்நிலையில், பாதுகாப்பு கேட்டு சசிகலா தரப்பில் சென்னை மாவட்ட காவல் ஆணையரிடம் மனு அளிக்கப் பட்டுள்ளது. இந்த மனுவில், சசிகலா அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் என குறிப் பிடப்பட்டுள்ளது. உள்ளாட்சித் தேர்தலில் அதிமுக தோல்வி அடைந்துள்ள சூழலில் சசிகலாவின் இந்த நகர்வு அ.தி.மு.க. வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மக்கள் நீதி மய்யம் கட்சியின் பணி இன்னும் விசையுடன் தொடரும்!

## வாக்களித்தோருக்கு நன்றி தெரிவித்து கமல் செய்தி

சென்னை, ஒக். 15

'உள்ளாட்சியில் தன்னாட்சி' எனும் இலட்சியக் கனலை இதயத்தில் ஏந்தி தேர்தலைச் சந்தித்த மநீம வேட்பாளர்களைப் பாராட்டுகிறேன். வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். ம.நீ.மவின் மக்கள் பணி இன்னும் விசையுடன் தொடரும்" என மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் மக்கள் நீதி மய்யம் கட்சி ஓர் இடம்கூட வெற்றி பெறாத நிலையில், அதன் கட்சித் தலைவர் கமல்ஹாசன் வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் தனித்து போட்டியிட்ட மக்கள் நீதி மய்யம் கட்சி, ச.ம.க. மற்றும் ஐ.ஜே.கே. ஆகிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டது. ஆனால், இந்தக் கூட்டணி தேர்தலில் படு தோல்வி அடைந்தது. மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன் கோவை தெற்கு தொகுதியில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். இதை யடுத்து, அக்கட்சியில் முக்கிய பொறுப்பில் இருந்த பலரும் கட்சியை விட்டு சென்றனர்.

இந்த நிலையில், ஒன்பது மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சித் தேர்தல் ஒக்ரோபர் 6 மற்றும் 9 ஆகிய திகதிகளில் இருகட்டங்களாக நடந்தது. வாக்கு எண்ணிக்கையும் இரண்டு நாட்களாக நடந்து முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில், மக்கள் நீதி மய்யம் கட்சி தனித்து போட்டியிட்டது. ஆனால், மக்கள் நீதி மய்யம் கட்சியால் இந்தத் தேர்தலில் ஓர் இடத்தில் கூட வெல்ல முடியவில்லை. இது அக்கட்சி



தொண்டர்களுக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதுபோன்று, நாம் தமிழர் கட்சியும் ஓர் இடத்தில் கூட வெற்றி பெறவில்லை.

இந்த நிலையில், மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் தனது டுவிட்டரில், "உள்ளாட்சியில் தன்னாட்சி" எனும் இலட்சியக் கனலை இதயத்தில் ஏந்தி தேர்தலைச் சந்தித்த மநீம வேட்பாளர்களைப் பாராட்டுகிறேன். வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். ம.நீ.மவின் மக்கள் பணி இன்னும் விசையுடன் தொடரும்" என்று பதிவிட்டுள்ளார்.

# உள்நாட்டு விமான சேவைகள் வழமைபோல

சென்னை, ஒக். 15

தமிழ் நாடு உட்பட இந் தியா முழுவதும் உள்நாட்டு விமான சேவை உச்ச வரம்பு இன்றி, முழு அளவில் இயங்க எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.



கொரோனா வைரஸ் தொற்று பரவலுக்கு எதிராக நாடு போராடும் வேளையில் பல்வேறு கட்டுப்பாடுகள் இருந்து வருகின்றன. கடந்த ஆண்டு மார்ச் மாதம் விமான சேவைகள் நிறுத்தப்பட்டன. பின்னர் கொரோனா தொற்று பரவல் குறையத்தொடங்கி படிப்படியாக விமானங்கள் இயக்கப்பட்டன. தற்போது விமானங்கள், கொரோனாவுக்கு முந்தைய சேவையில் 85 சத விகித சேவை வழங்க அனுமதிக் கப்பட்டுள்ளது.


இந்த நிலையில், இப்போது கொரோனா தொற்று பரவல் பெருமளவில் கட்டுப்படுத்தப் பட்டுள்ளதால், பயணிகள் விமானங்களில் செல்ல ஆர்வம் காட்டுகின்றனர். விமான சேவைக்கான தேவை அதிகரித்துள்ளது. உள்நாட்டு விமான சேவையை முழுத்திறனுடன் இயக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

இந்த நிலையில், வரும் 18 ஆம் திகதி முதல் உள்நாட்டு விமான சேவை உச்ச வரம்பு இன்றி, முழுத்திறனுடன் இயங்குவதற்கு அனுமதிப்பது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று சிவில் விமானப் போக்கு வரத்து அமைச்சகம் அறிவித் துள்ளது.

அதே நேரத்தில் விமானங் களை முழுமையாக இயக்குகிற போது, கொரோனா கால கட் டுப்பாடுகள் கடைப்பிடிக்கப் படுவதை உறுதி செய்யவும், பொருத்தமான விதிமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றுவதை உறுதி செய்யவும் விமான நிறு வனங்களும், விமான நிலையங் களை இயக்குவோரும் உறுதி செய்யுமாறு கோரப்பட்டுள்ள னர்.

# பொருளாதார நெருக்கடிக்குள் மாகாண சபை தேர்தல் எதற்கு?

## போர்க்கொடி தூக்கினார் தேரர்



கொழும்பு, ஒக். 15

**“இலங்கையை இந்தியாவின் மற்றுமொரு மாநில மாகவா இங்குள்ள ஆட்சியாளர்கள் நினைத்துக்கொண்டுள்ளனர். கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மாகாண சபை தேர்தல் எதற்கு” - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஓமல்பே சோபித தேரர்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு முட்டியது போலவே, கடும் நெருக்கடியான சூழ்நிலையில், பொருள்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான தொரு பின்புலத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடும் இடம்பெற்று வருகின்றது.

இக்கட்டான சூழ்நிலையில் யாரின் தேவைக்காக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுகின்றது? தேர்தலை நடத்துவதற்கான பொருளாதார பலம் தற்போது நாட்டில் இல்லை.

இந்தியாவின் தேவைக்காகவா மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுகின்றது என்ற வினா எழுகின்றது. இலங்கையானது இந்தியாவின் மற்றுமொரு மாநிலம் என்றா ஆட்சியாளர்கள் நினைத்துக்கொண்டுள்ளனர் - என்றார்.

(அ)



# இராணுவ வாகனம் - பாரவூர்தி கிளிநொச்சியில் மோதி விபத்து

## இரண்டு பேர் படுகாயம்

கிளிநொச்சி, ஒக். 15

கிளிநொச்சி கொக்காவில் பகுதியில் இராணுவ வாகனம் - பாரவூர்தி மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

படகு ஒன்றை இழுத்துச் சென்ற இராணுவ வாகனமும் சிமெந்து மூடைகளை ஏற்றிச் சென்ற பாரவூர்தியும் கொக்காவில் தொலைத்தொடர்பு கோபுரத்தை அண்மித்த பகுதியில் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் இருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த இராணுவத்தினர் மற்றும் போக்குவரத்துப் பொலிஸார் விபத்து தொடர்பான ஆரம்ப கட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர்.

# கட்டுப்பாடுகளை மீறி நிகழ்வுகளை நடத்துவோருக்கு கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 15

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மீறி நிகழ்வுகளை நடத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண இதனைத் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு அமைவாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் சுகாதார வழிகாட்டி வெளியிடப்பட்டுள்ளது.

இருப்பினும், பிற்போடப்பட்ட நிகழ்வுகளை நடத்துவதற்கான அனுமதியை பெறுவதற்கு நாளாந்தம் மக்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் காரியாலங்களுக்கு செல்வதாக அவர் குறிப்பிட்டார்.

# பண்டோரா ஆவணம் தொடர்பில் மற்றுமொரு விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஒக். 15

உலகளவில் பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ள ‘பண்டோரா’ ஆவணம் தொடர்பில் இலங்கை தேசிய வருமான வரித் திணைக்களமும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

மேற்படி ஆவணத்தில் பெயரிடப்பட்டுள்ள இலங்கையர்களை மையப்படுத்தியே, தமக்குள்ள அதிகாரத்துக்கமைய வருமான வரித்திணைக்களத்தால் இந்த விசாரணை முன்னெடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய பண்டோரா ஆவணம் தொடர்பில் தற்போது இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவும் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றது. ஆவணத்தில் பெயரிடப்பட்டுள்ள தொழிலதிபர் திருக்குமார் நடேசனிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ள நிலையில், அவரின் மனைவியான நிருபமா ராஜபக்‌ஷவிடமும் விசாரணை இடம்பெறவுள்ளது.

விசாரணைகளை நடத்தி ஒரு மாதத்துக்குள் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதியால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை விரைவில் தளரும்

கொழும்பு, ஒக். 15

மாகாணங்களுக்கு இடையேயான பயணத் தடை விரைவில் நீக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் 21 வரை தற்போதைய மாகாணங்களுக்கு இடையேயான பயணத் தடை அமுலில் இருக்கும். அதை நீடிப்பது குறித்து கோவிட் செயலணி கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும்.

எனினும், வெளிவிவகார அமைச்சர், பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், நேற்றுமுன்தினம் புதன் கிழமை வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் நடைபெற்ற கூட்டத்தில், மாகாணங்களுக்கு இடையேயான பயணத் தடையை நீக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

எப்போது தடை நீக்கப்படும் என்று அவர் குறிப்பிடவில்லை. ஆனால், நாட்டைத் திறக்க நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

# வட்டி விகிதங்களில் மாற்றம் இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஒக். 15

இலங்கை மத்திய வங்கியின் நாணய நிதியம் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில், மத்திய வங்கியின் நிலையான வைப்பு வசதி விகிதம் (SDFR) மற்றும் நிலையான கடன் வசதி விகிதத்தை (SLFR) தற்போதைய நிலைகளில் முறையே 5 சதவீதம் மற்றும் 6 சதவீதமாக பராமரிக்க முடிவு செய்தது.

உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிலைமைகள் மற்றும் எதிர்பார்த்த முன்னேற்றங்களை கவனமாக பரிசீலித்த பிறகே நிதியம் இந்த முடிவுக்கு வந்துள்ளது.

வரவிருக்கும் காலத்தில் பொருளாதாரம் அதன் திறனை அடைய உதவுவதோடு, தகுந்த நடவடிக்கைகளுடன் நடுத்தர காலப்பகுதியில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட மட்டத்தில் பணவீக்கத்தை பராமரிப்பதற்கான தனது உறுதிப்பாட்டை நிதியம் மீண்டும் வலியுறுத்தியது.





# கஹவத்தையில் புதனிரவு தமிழர்கள்மீது தாக்குதல்!

## சொத்துகளும் சேதம்!!

கொழும்பு, ஒக். 15

கஹவத்தை, வட்டாபத்தை தோட்டத்தில் நேற்று முன்தினம் இரவு தமிழர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் காயமடைந்த நால்வர் கஹவத்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் குழுவொன்றே தோட்டத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளது எனவும், சொத்துகளுக்கு சேதம் இழைக்கப்பட்டுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

வட்டாபத்தை தோட்டத்தில் தமிழ் இளைஞர் ஒருவர், ஓட்டோ திருத்தும் நிலையம் ஒன்றை நடத்திவந்தார். அங்கு மற்றுமொரு தமிழ் இளைஞரும் பணி புரிந்துள்ளார். குறித்த இளைஞன் நேற்றுமுன்தினம் இரவு உணவு வாங்குவதற்குச் சென்றுள்ளார்.

இதன்போது அவரை வழிமறிந்து பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் தகராறு செய்துள்ளனர். இதனால் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

அதன்பின்னர் இரவு 9 மணியளவில் தோட்டத்துக்கு வந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள், ஓட்டோ திருத்தும் நிலைய உரிமையாளரையும், அங்கு வேலை செய்தவரையும் அப்பகுதியில் இருந்த ஏனைய சிலரையும் தாக்கியுள்ளனர்.

4 ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளன. இதனால் வட்டாபத்தைப் பகுதியில் கடும் பதற்றம் நிலவியது. இது தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன.

# இலங்கையில் தனிநபரொருவரின் மாதாந்த வாழ்க்கை செலவு ரூ.5,353

கொழும்பு, ஒக். 15

இலங்கையில் தனிநபரொருவரின் அடிப்படைத் தேவைகளுக்கான குறைந்தபட்ச மாதாந்தச் செலவாக ரூபாய் 5,353 கணக்கிடப்பட்டுள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒகஸ்ட் மாத தரவுகளின் அடிப்படையில் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் கொழும்பு மாவட்டத்தில் வாழ்பவர்களின் மாதாந்த குறைந்தபட்ச செலவு ரூபாய் 5,810 ஆகும்.

மிகக் குறைந்தளவு வாழ்க்கைச் செலவை கொண்ட மாவட்டமாக மொனராகலை பதிவாகியுள்ளது. அங்கு மாதாந்த குறைந்தபட்ச செலவு ரூபாய் 5,040 ஆகும்.

# கிரியெல்லவின் மகள் களத்தில்!

## மைத்திரியின் மகளும் வருவாரா?

**கொழும்பு, ஒக். 15**

**மாகாணசபைத் தேர்தலில் முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவின் மகளான ஷாமி கிரியெல்ல போட்டியிடவுள்ளார் என தெரியவருகின்றது.**

மத்திய மாகாண சபைக்காக ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் அவர் கண்டி மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார் எனவும் அறியமுடிகின்றது. தேர்தலில் போட்டியிடுவதற்கான விருப்பத்தை அவர் ஏற்கனவே வெளியிட்டுள் ளார்.

அதேவேளை, மைத்திரிபால சிறிசேனவின் மகள் வடமத்திய மாகாணத்தில் போட்டியிடுவார் என முன்னதாக தகவல் வெளியிடப் பட்டிருந்தாலும் தற்போது அது கேள்விக்குறியாகியுள்ளது.

தேசிய மட்டத்திலான தேர்தலொன்றில் போட்டியிடவே அவர் உத்தேசித்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.



# சிறைக்குள் கைதியை தாக்கிய காவலர்கள் ஐவர் பணி நீக்கம்

கொழும்பு, ஒக். 15

கைதி ஒருவரை தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய அங்குணகொலபெலெஸ்ஸ சிறைச்சாலையின் 5 சிறைக் காவலர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சிறைக் காவலர்களுக்கும் கைதியை பார்வையிட வந்த வெளிநபர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் விளைவாக இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலில் ஈடுபட்ட நபர்களை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதைத் தொடர்ந்து, சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், சிறைக் காவலர்கள் ஐவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், சம்பவம் தொடர்பாக இரண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# எட்டு கொள்கலன் பால்மா விடுவிப்பு

## வார இறுதியில் சந்தைகளில் பெறலாம்



கொழும்பு, ஒக். 15

மேலும் 8 கொள்கலன் பால்மா விடுவிக்கப்படுவதற்காகவும் வார இறுதியில் தட்டுப்பாடின்றி நுகர்வோர் பால்மாவைச் சந்தைகளில் பெற்றுக்கொள்ள முடியுமென பால்மா வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் முக்கியஸ்தரான லக்ஷ்மன் வீரசூரிய தெரிவிக்கையில்-

மேலும், 8000 தொன் பால் மாவுக்கான தட்டுப்பாடு தற்போது சந்தையில் நிலவுகின்றது. மட்டுப்படுத்தப்பட்ட தினங்களில் ஒரே தடவையில் பெருமளவு பால்மாவை சந்தைக்கு விநியோகிக்க முடியாதுள்ளது-என்றார்.

அதேவேளை, நேற்று முன் தினமும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பால்மாவை கொள்வனவு செய்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காணப்பட்டனர்.

# பால் விலையும் அதிகரிப்பு?



கொழும்பு, ஒக். 15

பல்வேறு அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரித்துவரும் நிலையில், பால் விலையும் ஓரிரு நாள்களில் அதிகரிக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் டீ.பி.ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் பால் பண்ணையாளர்கள் தன்னிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

உள்நாட்டு சந்தையில் திரவப் பாலுக்கு கேள்வி அதிகரித்துள்ளதன் காரணமாக இவ்வாறு விலை அதிகரிப்பை மேற்கொள்ளவேண்டிய கட்டாயத்தில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பால் பண்ணையாளர்களின் நலன் கருதி மில்கோ நிறுவனம் திரவப் பாலின் விலையை அதிகரித்துள்ளதையும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

# செம்மலையில் நீரில் மூழ்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு!

முல்லைத்தீவு, ஒக். 15

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட செம்மலைப் பகுதியில் நீரில் மூழ்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். குறித்த சம்பவம் நேற்று முன் தினம் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. செம்மலைப் பகுதியில் நீர்நிலை ஒன்றில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோதே அவர் உயிரிழந்தாரென தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான 35 வயதுடைய சிறீசங்கர் என்று தெரியவந்துள்ளது.

மரணம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# தொலைபேசி இலக்கத்தை மற்றுமொரு வலையமைப்புக்கு மாற்ற சட்ட அனுமதி

கொழும்பு, ஒக். 15

பாவனையாளர்கள் உபயோகப்படுத்தும் தொலைபேசி இலக்கத்தை மற்றுமொரு வலையமைப்புக்கு மாற்றுவதற்கான (Number Portability) சட்ட அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாக தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஓஷத சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

# பஸ் உரிமையாளர்களுக்கு கிடைக்கவுள்ளது சலுகை!

கொழும்பு, ஒக். 15

தனியார் பஸ்துறையை மீண்டும் ஊக்கப்படுத்துவதற்காக சலுகை ஒன்றை வழங்கப் போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதனடிப்படையில் பஸ் உரிமையாளர் ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான சலுகை ஒன்றை வழங்கவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

தற்போது நாடளாவிய ரீதியில் சுமார் 20,000 பஸ்கள் சேவையில் ஈடுப்பட்டு வருகின்றனரென தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க பஸ் தொழிற்துறை சார்ந்த 6 தனியார் நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்

# மருத்துவ பட்டம் பெறும் வயதெல்லையை குறைக்க கல்வித்துறையில் மறுசீரமைப்புக்கு வலியுறுத்தல்

இலங்கையில் மருத்துவப் பட்டதாரிகள் பட்டம் பெறும் வயதெல்லையை சர்வதேச தரங்களுக்கு ஏற்ப குறைக்கும் வகையில் பரீட்சை முறைமைகளை மறுபரிசீலனை செய்யுமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் செய்தியாளர்களிடம் பேசிய அரச மருத்துவ அதிகாரிகள் சங்க தலைவர் மருத்துவர் அனுருத்த பாதெனிய இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

மூன்று தசாப்தங்களுக்கு முன்பு இலங்கையில் பட்டப் படிப்பை முடித்து எம்.பி.பி.எஸ். பட்டதாரிகள் 22 வயதில் வெளியேறக்கூடியதாக இருந்தது. இதனால் குறைந்த வயதிலேயே அவர்கள் மருத்துவத் துறையில் மேற்படிப்பை தொடர்வது இலகுவானதாக இருந்தது. 27 வயதுக்குள் அவர்கள் விசேட மருத்துவ ஆலோசர்களாக வர முடிந்தது. அத்துடன், குறைந்த வயதில் மருத்துவப் பட்டப் படிப்பை பூர்த்தி செய்வதால் மருத்து வத்துறையில் 32 அல்லது 33 ஆண்டுகள் வரை ஒருவர் பணி யாற்ற முடிந்தது.

எனினும், பல்வேறு காரணங்களால் தற்போது மருத்தவப் பட்டதாரி பட்டப்படிப்பை முடித்து வெளியேற 27 அல்லது 28 வயது ஆகிறது. அத்துடன், ஒருவர் மேற்படிப்பை முடித்து விசேட மருத்துவ ஆலோசகராக கிட்டத்தட்ட 40 வயதாகிவிடுகிறது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்க தலைவர் மருத்துவர் அனுருத்த பாதெனிய சுட்டிக்காட்டினார்.

எம்.பி.பி.எஸ். மருத்துவ பட்டதாரிகள் விசேட மருத்துவத்துறை ஆலோசகர்களாக தகுதி பெற காலதாமதம் ஆவதால் அவர்களால் நாட்டுக்கு 20 ஆண்டுகள் மட்டுமே சேவை செய்யக்கூடியதாக உள்ளது எனவும் அவர் கூறினார்.

இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக, கல்வி முறையில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். தேர்வு முறைகளில் மறுசீரமைப்பைச் செய்வதன் மூலம் மாணவர்கள் சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளை எழுதி முடித்து 18 வயதுக்கு முன்பே பல்கலைக்கழகங்களின் அனுமதி பெற முடியும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்க தலைவர் மருத்துவர் அனுருத்த பாதெனிய குறிப்பிட்டார்.

# எரிவாயுவின் விலை மீண்டும் அதிகரிப்பு?

கொழும்பு, ஒக். 15

நாட்டில் மீண்டும் சமையல் எரிவாயு விலையை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக லிற்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜயசிங்க இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறு விலை அதிகரிப்பை மேற்கொள்ளாமல் சந்தையில் நிலையாக இருப்பது கடினம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்காலத்தில் எரிவாயு விலை குறைக்கப்படும் என்று மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கவேண்டிய அவசியமில்லை என்றும், எரிவாயு விலையை நிலையான விலையொன்றின் கீழ் கொண்டு வர தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# 60 சட்டங்களை திருத்த நீதி அமைச்சு நடவடிக்கை

## நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 15

நாட்டின் பழைய 60 சட்டங்களைத் திருத்த நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது என நீதி அமைச்சர் மொஹமட் அலி சப்ரி தெரிவித்தார்.

சிறைக் கைதிகள் புனர்வாழ்வு மற்றும் சீர்திருத்த இராஜாங்க அமைச்சில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே, அவர் இதனைக் கூறினார்.

குறித்த 60 சட்டங்களிலும் கடந்த 20 வருடங்களாக எவ்வித சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை அமைச்சர் சுட்டிக்காட்டி னார்.

சட்ட திருத்த முன்மொழிவுகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் எனவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

அரச அதிகாரிகளும் பொது மக்களும் நாட்டுக்கான தமது பொறுப்புகளை நிறைவேற்றி, நாட்டின் முன்னேற்றத்துக்கு பங்களிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

(இ)

# ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 15

உணவட்டுன, ஹீனடிகல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என ஹபராதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

உணவட்டுன, ஹெடதெமல கந்தை பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இராணுவச் சிப்பாய், பொலிஸாருக்கு நிதி வழங்கும் வேலைத்திட்டத்தில் ஈடுபட்டவர் என பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபரராதுவ பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.





# கைதான 23 இந்திய மீனவர்கள் காரைநகர் கடற்படை முகாமுக்கு

யாழ்ப்பாணம், ஒக். 15

**வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 23 பேரும் காரைநகர் கடற்படை முகாமுக்கு மாற்றப்பட்டனர்.**

நேற்று முன்தினம் மாலை இந்த மீனவர்கள் வடமராட்சிக்கு நெருக்கமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர் என கடற்படை பேச்சாளர் இந்திக்கடி சில்வா தெரிவித்தார்.

வெற்றிலைக்கேணிப் பகுதியில் வைத்து அவர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர் என அவர் குறிப்பிட்டார்.

இதன்போது, அவர்களின் இரண்டு படகுகளும் கடற்படையினால் கைப்பற்றப்பட்டன என கடற்படைப் பேச்சாளர் கூறினார்.

கைதானவர்கள், காங்கேசன்துறை துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டு பின்னர் காரைநகர் கடற்படை முகாமுக்கு மாற்றப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட படகுகள் இரண்டும் மயிலிட்டி துறைமுகத்தில் கட்டப்பட்டுள்ளன.

கைதான மீனவர்களுக்கு மேற்கொள்ளப்படவுள்ள அன்ரிஜென் பரிசோதனையின் பின்னரேயே அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைதான மீனவர்களுக்கு எதிராக இரண்டு வாரங்களின் பின்னர் அறிக்கை நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் என்று நீரியல் வளத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இந்திய மீனவர்களின் தொடர் அத்துமீறலைக் கண்டித்து எதிர்வரும் 17ஆம் திகதி கடலில் இறங்கிப் போராட்டம் நடத்த கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சத்துணவு பொதி வழங்கும் திட்டம் இடைநிறுத்தம்

சதொச நிறுவனத்தால், கர்ப்பவதித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்ட சத்துணவுப் பொதிகள் வழங்கும் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக, சதொச நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மகளிர் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சால் கர்ப்பவதிகளுக்கு ஊட்டச்சத்து உதவித்தொகையாக 20,000 ரூபாய் வழங்கப்பட்டது. இந்த நிதியிலேயே. இதுவரை தலா 2,000 ரூபாய் மாதாந்த சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வந்தன. இந்நிலையில், நிதி பற்றாக்குறையால், இத்திட்டம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என அவர் கூறினார்.



# வலையில் சிக்கிய ரி-56!

மட்டக்களப்பு, ஒக். 15

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி திருச்செந்தூர் பகுதியில் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, மீன்களுடன் துப்பாக்கியொன்றும் அகப்பட்டுள்ளது.

இதனை அவதானித்த மீனவர்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர்.

இந்த துப்பாக்கி கல்லடி, திருச்செந்தூர் சுனாமி நினைவுத் தூபிக்கு பின்னாலுள்ள கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்களின் வலையிலேயே அகப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் துப்பாக்கியை மீட்டனர். ரி-56 ரகத் துப்பாக்கியே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளுக்காக துப்பாக்கி காத்தான்குடி பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

குற்றச்செயல்களில் ஈடுபட்ட எவரேனும் கடலில் எறிந்துவிட்டு சென்றிருக்கலாமென பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆசிரியர்களை குறைமதிப்புக்கு உட்படுத்துகிறது பெரமுன அரசு

## ஜே. வி. பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 15

பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்களுக்கு கௌரவமாக கற்பிக்க முடியாத அளவுக்கு ஆசிரியர்களை குறைமதிப்புக்கு உட்படுத்துவதாக அரசு மீது ஜே. வி. பி குற்றம் சுமத்தியுள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஜே. வி. பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு நியாயமான தீர்வுகளை வழங்குவதன் மூலம் பாடசாலை கல்வியை இயல்பு நிலைக்கு கொண்டுவருவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். கற்பித்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதால் மாணவர்களின் கல்வி தடைப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் மற்றும் பிரதமருடன் ஆசிரியர்கள் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர். எனினும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு சாதகமான தீர்வை அரசாங்கத்தால் வழங்க முடியவில்லை - என்றார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ஜே. வி. பி. பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய, அரசாங்கம் முதலில் மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்தவேண்டும்.

நாடு தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருகிறது.

அரசாங்கம் கொவிட் தொற்றுநோயைப் பயன்படுத்தி நிலைமையை நியாயப்படுத்த முயற்சிப்பது மற்றும் பொது மக்களைக் குறை கூறுவது வருந்தத்தக்கது.

கோவிட் -19 காரணமாக உலகம் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது, ஆனால் தற்போதைய நெருக்கடிக்கு இது மட்டும் காரணம் அல்ல. தற்போதைய நிலைமை பல முடிவுகளின் விளைவாகும். கடந்த 72 ஆண்டுகளில் அதிகாரத்துக்கான அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளே இதற்கு காரணம் - என்றார்.

# சிறையிலிருந்து கைபேசி மீட்பு; ரிஷாத் நீதிமன்றில் முன்னிலை

கொழும்பு, ஒக். 15

விளக்கமறியலில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனிடமிருந்து கைபேசி கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் அவர் மீண்டும் சிறைச்சாலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

சிறைச்சாலைகள் பேச்சாளர் சிறைச்சாலை ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை எதிர்வரும் 24 ஆம் திகதி சிறைச்சாலை நீதிமன்றில் மீண்டும் முன்னிலைப்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார் என அவர் குறிப்பிட்டார்.

மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதீயுதினின், சிறை அறையிலிருந்து கடந்த செப்ரெம்பர் முதலாம் திகதி கைபேசி ஒன்று கைப்பற்றப்பட்டிருந்தது.

அதனை பாராளுமன்ற உறுப்பினருக்கு வழங்கியதாகக் கூறப்படும் சிறை அதிகாரி மகசின் சிறைச்சாலையிலிருந்து வவுனியா சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஈழநாடு



# இந்திய இராணுவ தளபதியின் வருகை; சீனாவை ஓரங்கட்டும் முயற்சியா?



**புவிசார் அரசியல் விவகாரத்தில் இந்திய - இலங்கை நாடுகளுக்கு இடையிலான உறவுகளை, ஏனைய நாடுகளிலிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு இந்தியா தற்போது முயற்சித்து வருவதாக சவுதி அரேபியாவிற்கான முன்னாள் தூது வரும், முன்னாள் இராஜதந்திர அதிகாரியுமான அஹமட் ஜாவீட் யூசுப் தெரிவிக்கின்றார்.**

**ரஞ்ஜன் அருணண் பிரசாத்**

இலங்கை தொடர்பில் கடந்த சில காலமாக இந்தியா அதிக கவனம் செலுத்தி வருகின்ற நிலையில், சமீப காலமாக இந்தியாவில் இராஜதந்திர ரீதியிலான முக்கிய பிரமுகர்கள் தொடர்ச்சியாக இலங்கைக்கு பயணம் மேற்கொள்கின்றனர்.

குறிப்பாக இந்த மாத ஆரம்பத்தில் இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஹர்ஷ் வர்தன ஷ்ரிங்லா, இலங்கைக்கான அதிகாரப்பூர்வ பயணம் மேற்கொண்டிருந்தார்.

அவரின் வருகையின் போது, ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, தமிழ் மக்கள் பிரதிநிதிகள் என பலரையும் சந்தித்திருந்தார்.

அவரது விஜயத்தின் பின்னர், சுமார் 3 முதல் 5 வருட காலமாக நடைபெறாதிருந்த மாகாண சபைத் தேர்தலை நடத்தும் அறிவிப்பை அரசாங்கம் விடுத்திருந்தது.

இந்தியாவின் அழுத்தமே, மாகாண சபைத் தேர்தல் நடத்துவதற்கு காரணம் என எதிர்கட்சிகள் கூறிய போதிலும், அந்த கூற்றை வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் மறுத்திருந்தார்.

இவ்வாறான பின்னணியில், இந்திய வெளிவிவகார செயலாளரின் இலங்கைக்கான விஜயம் நிறைவு பெற்று, சுமார் ஒரு வாரம் கடப்பதற்கு முன்னர், இந்திய இராணுவ பிரதானி ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவனே இலங்கைக்கான அதிகாரபூர்வ 5 நாட்கள் அரசுமுறைப் பயணம் மேற் கொண்டுள்ளார்.

இலங்கை இராணுவ தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் அழைப்பின் பேரில் இந்திய இராணுவ தளபதி இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது.

இந்திய இராணுவ தளபதி, இலங்கை ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு செயலாளர், இராணுவ பிரதானி உள்ளிட்ட முக்கியஸ்தர்களை சந்திக்கவுள்ளதாக இராணுவ ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

அத்துடன், இலங்கை - இந்திய கூட்டுப் பயிற்சியான மித்ர சக்தி பயிற்சிகளின் இறுதி கட்டங்களையும் அவர் பார்வையிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இராணுவம் சார்ந்த சில முக்கிய நிகழ்வுகளிலும் அவர் கலந்துக் கொள்ளவுள்ளார்.

அதேபோன்று, இலங்கையில் உயிரிழந்த இந்திய இராணுவ நினைவு தூபிக்கு விஜயம் மேற்கொள்ளும் இந்திய இராணுவ தளபதி, அங்கு அஞ்சலி நிகழ்வுகளிலும் கலந்துக் கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் மிகப் பெரிய நாடான இந்தியாவின் ராணுவத் தளபதி, இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஜயமாக கருதப்படுகின்றது. இந்திய இராணுவ தளபதிகள் இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

இந்திய முன்னாள் இராணுவ தளபதியான ஜெனரல் பிபின் ராவத், 2018ஆம் ஆண்டு மே மாதம் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

இந்திய பாதுகாப்பு தரப்பு மாத்திர மன்றி, பல நாடுகளின் பாதுகாப்பு சார்ந்த முக்கியஸ்தர்கள் இலங்கைக்கான விஜயத்தை அண்மை காலமாக மேற் கொண்டிருந்தனர்.

இலங்கையில் கோவிட் - 19 நிலைமை தீவிரமாக காணப்பட்ட தருணத்தில், சீன பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி சீன பாதுகாப்பு அமைச்சர் தலைமையிலான தூதுக்குழு இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தது.

சீன பாதுகாப்பு அமைச்சர் தலைமையிலான குழு, ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு தரப்பின் பிரதானிகள் உள்ளிட்டோரை சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தியிருந்தது.

இந்த நிலையில், சீன பாதுகாப்பு அமைச்சரின் விஜயத்திற்கு பின்னர், உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரியொருவர் இலங்கைக்கு வருகின்ற முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

சீன திட்டங்கள் இலங்கையில் அதிகரித்து வருகின்ற நிலையில், இந்திய இராணுவ தளபதியின் விஜயம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது.

**ஏனைய நாடுகளிடமிருந்து போட்டி**

புவிசார் அரசியல் விவகாரத்தில் இந்திய - இலங்கை நாடுகளுக்கு இடையிலான உறவுகளை, ஏனைய நாடுகளிலிடமிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு இந்தியா தற்போது முயற்சித்து வருவதாக சவுதி அரேபியாவிற்கான முன்னாள் தூதுவரும், முன்னாள் ராஜதந்திர அதிகாரியுமான அஹமட் ஜாவீட் யூசுப் தெரிவிக்கின்றார்.

இலங்கை மற்றும் இந்திய நாடுகளுக்கு இடையிலான நட்புக்கு, ஏனைய நாடுகளிடமிருந்து போட்டி காணப்படுவதாகவும், அதனை பாதுகாத்துக்கொள்ளும் நோக்கிலேயே இந்திய அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறுகின்றார்.

அரசியல் ரீதியில் உறவுகளை மேம்படுத்துவதற்கு முயற்சிக்கு அப்பால் இராணுவ ரீதியில் ஏன் உறவுகளை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என பிபிசி தமிழ், அவரிடம் கேள்வி எழுப்பியது.

நாடுகளுக்கு இடையிலான உறவை மேம்படுத்தும் திட்டத்தில் அரசியல் ரீதியான உறவுகளே வலுப்படுத்தப்படும் என்ற போதிலும், இலங்கையுடனான உறவை மேம்படுத்துவதில் இராணுவ ரீதியிலான உறவுகளை மேம்படுத்த வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

இலங்கையில் கோவிட் - 19 ஒழிப்பு உள்ளிட்ட முக்கிய விடயங்களில் இராணுவம் ஆதிக்கம் செலுத்தி வருவதாக அவர் கூறுகின்றார்.

இலங்கையில் ராணுவத்தின் ஆதிக்கத்தை கருத்திற் கொண்டு, இந்திய இராணுவ ரீதியிலான உறவுகளை மேம்படுத்துவதற்கு இந்தியா முயற்சித்து வருவதை அவதானிக்க முடிகின்றது என அவர் குறிப்பிட்டார்.

இராணுவ ரீதியிலான உறவுகள் மேம்படுத்தப்படும் பட்சத்தில், அது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேம்படுத்துவதாகவே அமைகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

**கசப்பான உறவை சீர்செய்யும் முயற்சி?**

பின்னடைவை சந்தித்திருந்த இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மூத்த பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் தெரிவிக்கின்றார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கிலேயே, இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் கடந்த வாரம் நாட்டிற்கு வருகைத் தந்திருந்ததாகவும், தற்போது இராணுவ பிரதானி நாட்டிற்கு வருகைத் தந்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

அதேபோன்று, இலங்கையில், இரு நாட்டு இராணுவத்தினரின் பங்குப்பற்றுதலுடன் பயிற்சி நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதாக அவர் குறிப்பிடுகின்றார்.

இந்தியாவுடன் காணப்பட்ட கசப்பான உறவை சீர் செய்யும் வகையிலேயே இவ்வாறான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

இந்தியாவுடனான உறவை வலுப்படுத்திக் கொள்ளும் வகையில், இந்தியாவிற்கான இலங்கையின் புதிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள மிலிந்த மொரகொடவின் முயற்சியினால் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மூத்த பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் குறிப்பிடுகின்றார்.

சீனாவிற்கு நிகரான மூலோபய நலன்களை இலங்கையுடன் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் இந்தியாவிற்கு உள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

எனினும், சீனாவுடனான இலங்கையின் உறவை போல, இலங்கை இந்தியாவுடன் உறவை பேணாத போதிலும், இந்தியாவுடன் அண்மித்த உறவை பேண வேண்டும் என்ற உணர்வை இலங்கை ஆட்சியாளர்கள் உணர்ந்துள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இராஜதந்திர உறவுகளின் போது, இந்திய இராணுவத்தின் பிரவேசம் குறித்தும், மூத்த பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் பிபிசி தமிழுக்கு கருத்து தெரிவித்தார்.

மூலோபய நலன்கள் என்ற விடயத்திற்குள், பொருளாதாரம், இராணுவம், புலனாய்வு, கடல்சார் பாதுகாப்பு விடயங்கள், அரசியல் என அனைத்தும் உள்ளடங்கும் என அவர் விளக்கமளித்தார்.

அனைத்து துறைகளிலும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை துரிதகரியில் வலுப்படுத்துவதே, இவ்வாறான விஜயங்களின் நோக்கமாக காணப்படுகின்றது என மூத்த பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் தெரிவிக்கின்றார்.


**இலங்கை - இந்திய ராணுவ தொடர்பு**

இலங்கை - இந்திய நாடுகளுக்கு இடையில் பல ஆண்டு கால இராணுவ தொடர்புகள் காணப்பட்டு வருகின்ற நிலையில், உள்நாட்டு போர் காலத்திலும் இந்தியா இராணுவத்தின் பங்களிப்பு இலங்கைக்கு இருந்து வந்தது.

இலங்கையில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் 1987ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படை நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இந்த ராணுவ அமைதிப்படை இலங்கையில் தனது பணிகளை 1987ஆம் ஆண்டு ஆரம்பித்திருந்தது.

இவ்வாறு இலங்கைக்குள் பிரவேசித்த இந்திய அமைதிபடை 1990ம் ஆண்டு காலப் பகுதியில் நாட்டை விட்டு வெளியேறியது. இவ்வாறான நிலையில், இந்திய இராணுவத்திற்கும், இலங்கைக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் காலம் காலமாக இருந்து வருகின்றது. ■

**- பி.பி.சி.**



# சத்குரு சீரடி சாயி புண்ணிய திதி

**எஸ். டி. எஸ். உதய நாயகன்**

சீரடி சாயி பாபா வாழ்ந்து, சமாதியாகி நூற்றாண்டாகி விட்டது. ஆனால், இவ்வுலகில் ஏதோ ஒரு மகா சக்தியாக வாழ்ந்துகொண்டிருக்கிறார். அதற்கு எடுத்துக்காட்டு, உலகிலுள்ள அவரின் ஆலயங்களில் சீரடி பக்தர்களின் எண்ணிக்கை. இன்றைய காலகட்டத்தில் பக்தர்களின் சுமைகளை ஏற்று, மன திருப்தியை அளிப்பதும், கைகூடாத, நினைத்துப் பார்க்க முடியாத காரியங்களை நிவர்த்தி செய்வதும், அவர்களின் கனவில் வந்து அறிகுறிகளை வெளிப்படுத்துவதும். தியானத்தில் காட்சியளிப்பதும். வேறு ஒருவரின் தோற்றத்தில் வந்து உதவிபுரிவதும். தீடீர் என்று தனது தோற்றத்தை ஏதோ ஒரு வழியில் தெரிவிப்பதுமாக இருக்கிறது.

"சர்வம் விஷ்ணுமயம் ஜகத்" என்பது வேதாந்தத்தின் மையக் கோட்பாடு. அதுவே எங்கும் நிறை தன்மை எனலாம். சீரடி சாயி இந்த கொள்கைப்படி வாழ்ந்தார். அவர் எல்லா உயிர்களிடத்திலும் தன்னைக் கண்டார். ஜாதி, மதம், இனம் என்பது மனிதனால் ஏற்படுத்தப்பட்டது. இதை அவரிடத்தில் எடுத்துச் செல்ல முடியாது. அவரே தனது ஜாதியையும், மதத்தையும் வெளிப்படுத்தாமையே விஷேமானது.

பாபா எதையும் போதித்ததில்லை. பிரசங்கம் செய்தது கிடையாது. தத்துவக் கட்டுரை எழுதியது இல்லை. கபிலர், ஆதி சங்கரர் போல் தத்துவ சாஸ்திரிமில்லை. ஆனால், அவரின் வாழ்க்கையின் நடைமுறை, ஆயிரக் கணக்கான தத்துவப் புத்தகங்கள் செய்வதைவிட, ஏராளமான மக்களை அவர் பக்கம் இழுத்தது. பாபா குருவாக இருக்க சம்மதித்த தில்லை. சீடர்களை உருவாக்கியது கிடையாது. குரு பரம்பரை சொத்து உரிமையையும், சொந்தங்களையும் ஏற்படுத்துவதால் பாபா இதை எதிர்தார். சீரடி சாயி பாபாவின் தத்துவம் ஜனநாயக சோஷலிச கொள்கையைப் போன்றது. பாபா நூறாண்டுகளுக்கு முன்பே ஜனநாயகம், சோஷலிசம், மதச்சார்பின்மை போன்றவற்றை உருவாக்கி காட்டிவிட்டார். இவையே இன்றைய அரசியல் சாசனத்தின் அரண்களாகும்.

பாபாவின் வேத வாக்கு "நம்பிக்கை", "பொறுமை" என்பதாகும். இன்றைய இந்த இக்கட்டான காலகட்டத்தில், பாபா மீது வைத்துள்ள பரிசுத்தமான பூரண நம்பிக்கை, நம் வாழ்வுக்கு நிட்சயம் கை கொடுக்கும், பொறுமையாக வழிபட்டால், இப்போதுள்ள ஆபத்தான கட்டங்களைக் கூட தாண்டமுடியும். அவரது உதி, சாயி பக்தர்களுக்கு ஒரு பாதுகாப்பான மருந்து.

இன்று 15ஆம் திகதி விஜயதசமி திதி. சீரடி சாயி பாபா அவதரித்த, மற்றும் மகா சமாதியடைந்த நன் நாள். கொழும்பு, புதுச்செட்டித் தெருவிலுள்ள, சீரடி சாயி மத்திய நிலையம் ஸ்ரீலங்காவின் ஆதரவில், நான்கு கால ஆராத்திகள், ஆராதனைகள் அனைத்தும், நாட்டின் சுகாதராக் கட்டுப்பாட்டுக்கு அமைவாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் மிகப் பிரமாண்டமாக எழுந்து வரும், உயரமான சீரடி இராஜ கோபுரம் அடுத்த ஆண்டு, காலாகலமாக கும்பாபிஷேகத்துடன் திறக்கப்படவுள்ளது.

---

# தமிழ்நாடு உள்ளாட்சி தேர்தலில் நாம் தமிழர் கட்சி படுதோல்வி ஏன்?

**ஆ. விஜயானந்த்**



தமிழகத்தில் நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலில் மாவட்ட ஊராட்சி மற்றும் ஒன்றிய கவுன்சிலர் ஆகிய இடங்களில் ஓர் இடத்தைக் கூட நாம் தமிழர் கட்சி பெறவில்லை. "ஒரு கட்சி கொஞ்சம் கொஞ்சமாகத் தான் வளர முடியும். ஒரேநாளில் ஒரு செடியில் பூ பூப்பதும் இல்லை, காய்ப்பதும் இல்லை" என்கிறார் சீமான். நாம் தமிழர் கட்சியின் தோல்விக்கு என்ன காரணம்?

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி, தென்காசி ஆகிய ஒன்பது மாவட்டங்களுக்கு கடந்த ஒக்டோபர் 6 மற்றும் 9 ஆகிய திகதிகளில் ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றது.

கடந்த செவ்வாய் கிழமையன்று நடந்த வாக்கு எண்ணிக்கையில் 986 இடங்களுக்கு மேல் ஒன்றிய கவுன்சிலர் பதவிகளிலும் 137 மாவட்ட கவுன்சிலர் பதவிகளிலும் தி.மு.க வெற்றி பெற்றுள்ளன அதேநேரம், 199 ஒன்றிய கவுன்சிலர் இடங்களிலும் 3 மாவட்ட கவுன்சிலர் பதவிகளிலும் அ.தி.மு.க வெற்றி பெற்றுள்ளது.

ம.தி.மு.க, வி.சி.க, அ.ம.மு.க உள்ளிட்ட கட்சிகள் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்றாலும், நாம் தமிழர் கட்சியும் மக்கள் நீதி மய்யமும் படுதோல்வியை சந்தித்துள்ளன. குறிப்பாக, ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி மன்ற பதவிகளில் நாம் தமிழர் கட்சி வெற்றி பெறவில்லை. "இப்படியொரு தோல்வியை அக்கட்சியின் நிர்வாகிகள் எதிர்பார்க்கவில்லை" எனவும் கூறப்படுகிறது.

உள்ளாட்சித் தேர்தல் பிரசாரத்தின் போது பேசிய சீமான், "மக்களிடம் வாக்கு சேகரிப்பதற்காக தமிழ்நாடு முழுவதும் நான் ஒருவன்தான் சுற்றிச் சுழன்று பரப்புரை செய்து வருகிறேன். மற்ற கட்சியினர் எல்லாம் வாக்காளர்களுக்கு பணம், பட்டுப்புடவை, நகை எனக் கொடுத்து வாக்குகளைப் பறிப்பதற்கு வரிசை கட்டி நிற்கிறார்கள்" என விமர்சனம் செய்தார். சட்டமன்றத் தேர்தலில் ஆறு சதவிகித வாக்குகளுக்கு மேல் பெற்றதால் இந்தமுறை அதிகப்படியான உள்ளாட்சிப் பதவிகள் கிடைக்கலாம் எனவும் நாம் தமிழர் கட்சியின் நிர்வாகிகள் பேசி வந்தனர். இந்நிலையில், தேர்தல் முடிவுகள் நாம் தமிழர் கட்சிக்கு அதிர்ச்சியை அளித்துள்ளன.

இதுகுறித்து, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானிடம் கேள்வியெழுப்பிய செய்தியாளர்கள், "விஜய் மக்கள் இயக்கம் அதிக இடங்களில் வென்றுள்ளதே?" எனக் கேட்டபோது, "விஜய் மக்கள் இயக்கம் வென்றிருந்தால் அவர்களுக்கு வாழ்த்துகள். உள்ளாட்சித் தேர்தலில் கிடைக்கும் வெற்றிக்கு அந்தந்த பகுதிகளில் உள்ளவர்களின் செல்வாக்குதான் காரணம். எனவே, விஜய்க்காக மக்கள் வாக்கு செலுத்தினார்கள் என நான் நினைக்கவில்லை" என்றார்.

தொடர்ந்து நாம் தமிழர் கட்சியின் தோல்வி குறித்துப் பேசிய சீமான், "நாங்கள் பல இடங்களில் ஊராட்சி மன்றத் தலைவர் பதவிகளை வென்றுள்ளோம். இதனை படுதோல்வி என எப்படிக் கருத முடியும்? ஒரு கட்சி கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வளர முடியும். ஒரே நாளில் ஒரு செடி பூப்பதும் காய்ப்பதும் கிடையாது. இதனை தோல்வி என களத்தில் நிற்கும் நாங்களே நினைக்கவில்லை. கோடிகளைக் கொட்டாமல் கொள்கைகளைப் பேசி இந்தக் கட்சிகள் களத்தில் நிற்குமா? தி.மு.க தனித்துப் போட்டியிடுமா? இன்றைக்கு மக்கள் எங்களுக்கு ஆதரவு தராவிட்டால், நாளை தருவார்கள். நாளை மறுநாள் தருவார்கள். 5 வருடங்கள் கழித்து இதே கேள்வியை என்னிடம் கேளுங்கள்" என்றார்.

"உள்ளாட்சித் தேர்தல் முடிவுகளை எவ்வாறு எடுத்துக் கொள்வது?" என நாம் தமிழர் கட்சியின் செய்தித் தொடர்பாளர் பாக்கியராசனிடம் பிபிசி தமிழுக் காக பேசினோம். "தி.மு.க ஆட்சிக்கு வந்த பிறகு, "கட்டாயம் வெற்றி பெற வேண்டும்" என்ற சூழல் அவர்களுக்கு இருக்கிறது. நாங்கள் 21 ஊராட்சி வார்டுகளில் வெற்றி பெற்றுள்ளோம். இராணிப்பேட்டையில் ஓர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியை பெற்றுள்ளோம். களத்தில் இன்னமும் நாங்கள் வேலை செய்ய வேண்டும் என்பது தெரிகிறது. இந்தத் தேர்தலை நாங்கள் மனதில் வைக்கவும் இல்லை, இலக்காக வைத்து செயல்படவும் இல்லை" என்கிறார்.

தொடர்ந்து பேசியவர், "இந்தத் தேர்தலில் ஆளும்கட்சியின் நடவடிக்கைகளும் பணமும் பிரதான பங்கு வகித்தன. மக்களிடம் நாங்கள் வாக்குக் கேட்டுச் செல்வதிலேயே பிரச்னைகள் இருந்தன. சட்டமன்றத் தேர்த லின்போது, "இந்த இடத்தில் பிரசாரம் செய்கிறோம்" எனக் கூறினால் அனுமதி கிடைக்கும். நாங்களும் எளிதாக பிரசாரம் செய்தோம். இந்தமுறை அவ்வாறு பிரசாரம் செய்வதிலேயே தடைகள் இருந்தன.

நாங்கள் பத்து பேருடன் வாக்கு கேட்டுச் செல்லும்போது, அதே இடத்தில் மற்றவர்களும் பிரசாரம் செய்ய வந்தனர். இது ஒரு புதிய அனுபவமாக இருந்தது. வாக்கு எண்ணிக்கை மையத்தில் கேள்வி கேட்பதிலும் பிரச்னைகள் இருந்தன. பல இடங்களில் பத்திரிகையாளர்களையே அனுமதிக்கவில்லை. இனி வரக் கூடிய பாராளுமன்றத் தேர்தலில் எங்களின் செயல்பாடுகளைப் பாருங்கள். அதன்பிறகு முடிவு செய்யுங்கள்" என்கிறார்.

"நாம் தமிழர் கட்சியின் தோல்வியை எவ்வாறு எடுத்துக் கொள்வது?" என மூத்த பத்திரிகையாளர் என்.அசோகனிடம் பிபிசி தமிழுக்காக பேசினோம். "நாம் தமிழர் கட்சியினர் சமூக ஊடகங்களிலும் பிரதான ஊடகங்களிலும் தாங்கள் சொல்லும் அதிரடியான கருத்துகளுக்காக கவனத்தைப் பெறுகின்றனர். சீமானின் உரைகளும் நேர்காணல்களும் கவனத்துடன் பார்க்கப்படுகின்றன. ஆனால், இந்த ஊடகக் கவனத்தை தேர்தல் களத்தில் பெறும் வாக்குகளுடன் ஒப்பிடுகையில் அவர்கள் இன்னும் எவ்வளவோ தூரம் மேல் எழுந்து வரவேண்டியதாக உள்ளது" என்கிறார்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் : 1 மணி 15 நிமி.

கல்வி tv CHANNEL

31. இரவில் மலரும் பூ
1. செம்பருத்தி 2. கடுபுல் 3. மல்லிகை 4. நித்தியகல்யாணி

32. அதிகளவு வித்துக்களைக் கொண்ட பழம்
1. மா 2. ஆனைக்கொய்யா 3. பப்பாசி 4. மங்குஸ்தான்

33. பின்வருவனவற்றுள் மிகச்சிறிய வித்து
1. கடுகு 2. பலா 3. மா 4. பாசிப்பயறு

34. தாவர இலைகளை வளைத்துச் சுருட்டி கூடுகளைச் சேதப்படுத்துவது
1. கொக்கு 2. காகம் 3. அணில் 4. முசிறு

35. கறி சமைக்க பயன்படும் பூ வகை
1. பொன்னாவரசு 2. வில்வித்திரியம் 3. வற்றாளை 4. அகத்தி

36. தோலின் மூலமாக சுவாசிக்கும் பிராணி
1. மீன் 2. மண்புழு 3. அணில் 4. திமிங்கிலம்

37. பொதி செய்யப்பட்ட உணவில் கட்டாயமாக அவதானிக்க வேண்டியது
1. உற்பத்தித்திகதி 2. தரச்சான்றிதழ் 3. காலாவதித்திகதி 4. குறியீடு


38. இலங்கையின் மிகப் புராதனமான தலைநகராக விளங்கியது
1. கொழும்பு 2. அனுராதபுரம் 3. பொலன்னறுவை 4. நீர்கொழும்பு

39. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக முறையிட வேண்டிய தொலைபேசி இலக்கம்
1. 119 2. 1919 3. 1929 4. 1984

40. கண்டி - யாழ்ப்பாண பிரதான வீதி வகை எது?
1. $A_9$ 2. $A_5$ 3. $A_1$ 4. $A_3$

41. வடமாகாணத்தின் மாவட்டங்களின் எண்ணிக்கை
1. 3 2. 4 3. 5 4. 6

42. பூக்களின் பகுதிகளுள் ஒன்றாக அமையாதது
1. வித்து 2. குறி 3. தம்பம் 4. சூலகம்

43. 

இவ் முகபாவனை குறிப்பது
1. மகிழ்ச்சி 2. கவலை 3. வியப்பு 4. கோபம்

44. பாதுகாப்பற்ற சந்தர்ப்பமாக காணப்படுவது
1. வாயு அடுப்பில் சமைத்தல் 2. பற்றைக்காடு
3. வழுக்கும் வீதி 4. உடைந்த படிக்கட்டு

45. சூரிய நமஸ்காரம் செய்யக் கூடிய காலம்
1. காலை 2. பகல் 3. மாலை 4. இரவு

விடைகள்

01.
1. நண்பர்கள் / ஒன்றாக படிக்கும் சகபாடிகள்
2. ஆசிரியர், சத்தியன், ஆதவன்
3. செய்திருப்பேன்
4. ஓடி, வந்து
5. நாங்கள் உங்களுக்கு துன்பங்களை செய்திருப்போம்
6. நீ, கண்ணீர்
7. முற்றுப்புள்ளி, வியப்புக்குறி, மேற்கோட்குறி
8. 1. கண் 2. உள்ளம் 3.ஆசிரியர் 4. கரம்
9. 1. செய்து இருப்பேன் 2. கண் நீர்
10. நீ

**(10 x 1 = 10 புள்ளிகள்)**

02.
1. ஊழியர்களால்

# வடக்கில் வாள்வெட்டுக்கு முடிவு கட்டியே தீருவேன்!

## புதிய ஆளுநர் ஜீவன் உறுதி



கொழும்பு, ஒக். 15

**"வடக்கில் தலைவிரித்தாடும் வாள்வெட்டு மற்றும் கத்திவெட்டுச் சம்பவங்களுக்கு முடிவு கட்டுவேன்."**

- இவ்வாறு வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

பதவிப் பிரமாணத்தின் பின்னர் முதன்முறையாக அவர் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய காணொலி நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எனது பதவிக்காலத்தில் வடக்கு மாகாணத்தில் வாள் வெட்டுச் சம்பவங்களுக்கு - கத்திவெட்டுச் சம்பவங்களுக்கு ஒருபோதும் இடமில்லை. ஆட்களின் கை, கால் வெட்டுவதற்கு இடமில்லை.

இந்த அடாவடிகளில் யாராவது ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுப்பேன்.

வடக்கு மாகாணம் அனைவருக்கும் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்வேன்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தின் கல்வி வளர்ச்சி தொடர்பில் அதிக கரிசனை செலுத்துவேன்.

பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை இனங்கண்டு அதற்கான தீர்வை வழங்க நடவடிக்கை எடுப்பேன்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்துவேன். இதற்குத் தீர்வு காண இலங்கை மீன்பிடி அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் நான் பேசுவது மட்டுமன்றி அவர்களூடாக இந்திய மத்திய அரசுடனும் பேசுவேன்" - என்றார். (இ)

---

## விபச்சார விடுதி சுற்றிவளைப்பு; 3 பெண்கள் உட்பட நால்வர் கைது

நீர்கொழும்பு, ஒக். 15

விபச்சார விடுதி ஒன்று சுற்றி வளைக்கப்பட்டதில் மூன்று பெண்கள் உட்பட நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடாபாடுவ பகுதியில் ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற பேரில் நடத்தப்பட்ட விபச்சார விடுதியே சுற்றிவளைக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நீர்கொழும்பு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது விபச்சாரத் தொழிலில் ஈடுபடும் மூன்று பெண்களும், விடுதியின் உரிமையாளரான ஆண் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

46, 40 மற்றும் 21 வயதுடைய பெண்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். (இ)

---

## வெள்ளைப்பூண்டு மோசடி குற்றச்சாட்டு: கைதுசெய்யப்பட்ட ஐவருக்கும் பிணை!

கொழும்பு, ஒக். 15

சதொச நிறுவனத்தின் வெள்ளைப்பூண்டு மோசடி குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட ஐவருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வழங்கு நேற்று வத்தளை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டபோதே, சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

சதொச நிறுவனத்தின் நான்கு அதிகாரிகளும் சம்பவத்தில் தொடர்புபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வர்த்தகரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மோசடியாக விற்பனை செய்யப்பட்ட 54 ஆயிரம் கிரோ கிராம் வெள்ளைப் பூண்டு தொகை கடந்த செப்டெம்பர் மாதம் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர்களான நான்கு அதிகாரிகளும் சதொச நிறுவனத்தில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். (இ)

---

## 3 ஆண்டுகளில் மக்களால் விரட்டியடிக்கப்படும் அரசு

### அமைச்சர் அமரவீர எச்சரிக்கை



கொழும்பு, ஒக். 15

"நாட்டில் மக்களின் அத்தியாவசியப் பொருட்களின் விலை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. இப்போது தவறுகளைத் திருத்திக்கொள்ளாது போனால் அடுத்த மூன்று ஆண்டுகளில் மக்களால் இந்த அரசு விரட்டியடிக்கப்படும்."

- இவ்வாறு அமைச்சர் மஹிந்த அமரவீர எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு மக்களைக் கடுமையாகப் பாதித்துள்ளமை உண்மையே. எந்தக் காரணம் கூறியும் இதனை அரசாக எம்மால் நிராகரிக்க முடியாது.

ஆனால், ஏற்கனவே பொருளாதார நெருக்கடி நிலைமையை நாடு எதிர்கொண்டிருந்த நிலையில் எதிர்பாராத விதமாக கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக மேலும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

இந்த இரண்டு ஆண்டுகளில் அரசாக நாம் விட்டுள்ள தவறுகள் என்ன என்பதை ஆராய்ந்து, சுய கணிப்பை செய்துகொண்டு உடனடியாகத் திருத்திக்கொள்ள வேண்டிய விடயங்களைக் கவனம் செலுத்தி மக்கள் மீதான சுமையைக் குறைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இல்லையேல் அடுத்த மூன்று ஆண்டுகளில் எமது அரசை மக்களே விரட்டியடித்து விடுவார்கள்" - என்றார். (இ)

---

## வாய்க்கு பிளாஸ்டர் ஒட்டப்பட்ட நிலையில் ஆணின் சடலம் மீட்பு

### பொலிஸார் பல கோணங்களில் விசாரணை

கேகாலை, ஒக். 15

வாய்க்குப் பிளாஸ்டர் ஒட்டப்பட்ட நிலையில், ஆண் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கேகாலை மாவட்டம், வரக்காபொல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட துல்கிரிய, மா ஓயாவுக்கு அருகிலிருந்தே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உடுகம, அரத்தன பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயது நபரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், பன்னல பிரதேசத்தை சேர்ந்தவர் என்றும், இவரைக் கடந்த 10ஆம் திகதி முதல் காணவில்லை என்று அவரின் மனைவி பன்னல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பிரேத பரிசோதனைக்காக கேகாலை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதால் பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ)

---

## கொலையாளிகள் எவராக இருந்தாலும் கட்டாயம் தண்டிக்கப்பட்டே தீரவேண்டும்

### சரத் பொன்சேகா எம். பி. வலியுறுத்து



கொழும்பு, ஒக். 15

"11 அப்பாவி பிள்ளைகளைக் கடத்திச் சென்று கப்பம் கோரி, அது கிடைக்காததால், அந்தப் பிள்ளைகளைக் கொலை செய்திருந்தால், இராணுவத் தளபதியல்ல எவராக இருந்தாலும் கட்டாயம் தண்டனை கிடைக்க வேண்டும்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்த 11 இளைஞர்கள் கடத்தப்பட்டபோது வசந்த கரன்னாகொட கடற்படை தளபதியாக இருந்தார். நான் அந்தக் காலத்தில் இராணுவத் துக்குக் கட்டளைகளை வழங்கினாலும் இப்படியான அநியாயங்களைச் செய்ய அனுமதிக்க வில்லை.

இவ்வாறான செயல்களைச் செய்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் நான் இருக்கின்றேன். கரன்னகொடவுக்கு விடுதலை வழங்கப்பட்டாலும் - வழக்கு திரும்பப் பெறப்பட்டாலும் தனிப்பட்ட ரீதியில் அதனை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்.

படைத்தளபதியாக இருந்தாலும் வேறு ஒருவராக இருந்தாலும் கொலை செய்திருந்தால் - குற்றம் செய்திருந்தால், அந்த நபருக்குக் கட்டாயம் தண்டனை வழங்கப்பட வேண்டும்" - என்றார்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் நலன் அறிய, அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்குச் சென்றிருந்தபோது, செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே சரத் பொன்சேகா எம்.பி. மேற்கண்டவாறு கூறினார். (இ)

---

## மேலும் 81 பேர் கைது!



நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற் றச்சாட்டில் மேலும் 81 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது. இதற்கமைவாக தனிமைப் படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 80 ஆயிரத்து 790ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிப் பயணித்த 145 வாகனங்களில் வந்த 337 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (இ)



# வில் - அம்பு தாக்குதல்; நோர்வேயில் ஐவர் பலி!

ஒஸ்லோ, ஒக். 15

நோர்வேயில் அம்பு எய்து நடத்தப்பட்ட தாக்குதலில் ஐவர் பலியாகினர். அத்துடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலை நடத்திய நபர் 37 வயதான டெனிஷ் பிரஜை ஆவார். பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

நோர்வேயின் தென்கிழக்கே கொங்ஸ்பேர்க் என்ற நகரில் நேற்று முன்தினம் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தாக்குதல் நடத்தியவர் தனியாள் என்றும் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் எனவும் பொலிஸ் பேச்சாளர் உறுதிப்படுத்தினர்.

கைதின்போது காயமடைந்த அவர் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளார். இது ஒரு பயங்கரவாத நோக்கம் கொண்ட தாக்குதல் என்றே பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

தாக்குதலை தொடர்ந்து கொங்ஸ்பேர்க் நகரம் முடக்கப்பட்டது. தாக்குதலாளி பலரை அம்புகளை எய்து தாக்குதலை நடத்தியிருந்தார். உடனடியாக காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டனர். தாக்குதலை தொடர்ந்து அந்த நகரம் முழுவதும் ஆயுதம் ஏந்திய பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர்.

நோர்வேயில் உத்தோயா தீவில் நபர் ஒருவர் எழுபது பேரைக் கொன்ற படுகொலைக்குப் பிறகு நடந்துள்ள மோசமான தாக்குதலாக இந்தச் சம்பவம் கருதப்படுகிறது.

பொதுவாக ஸ்கன்டிநேவியன் நாடுகளில் பொலிஸார் துப்பாக்கியுடன் பணி புரிவதில்லை. இந்த சம்பவத்தை அடுத்து சகல பொலிஸ் பணியாளர்களும் ஆயுதம் வைத்திருக்க வேண்டும் என்று நோர்வே பொலிஸ் தலைமையகம் உத்தரவிட்டிருக்கிறது. (ஐ)

# உணவு பஞ்சம் ஏற்படும் ஆபத்தில் வடகொரியா!

## ஐ. நா. சபை எச்சரிக்கை

பியோங்யாங், ஒக். 15

சர்வதேச தடைகள் மற்றும் கோவிட் - 19 தொற்று நோயால் எல்லைகள் மூடப்பட்டமையால் வட கொரியாவில் உணவுப் பஞ்சம் ஏற்படும் அபாயம் உள்ளதாக அந்நாட்டில் உள்ள ஐ. நா. அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

குறிப்பாக, சிறுவர்கள் மற்றும் முதியோர் கடும் பட்டினியால் பாதிக்கப்படும் ஆபத்து உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

உணவு பஞ்சத்தால் வட கொரிய மக்கள் மரியாதையுடன் வாழும் ஒரு வாழ்க்கையை இழந்து வருகின்றனர் என ஐ. நா. அதிகாரி குவாண்டானா சுட்டிக்காட்டியுள்ளார்.

வட கொரியாவின் அணு ஆயுத சோதனைகளை மேற்கொண்டதால் அந்நாட்டின் மீது பல நாடுகள் தடைகளை விதித்துள்ளன. இந்நிலையில் நெருக்கடியைத் தீர்க்கும் வகையில் தடைகளை நீக்க வேண்டும் எனவும் அந்த அதிகாரி வலியுறுத்தினார்.

கொரோனா தொற்றிலிருந்து தப்ப சீனாவுடனான எல்லையை வடகொரியா மூடியதால் அந்நாட்டுடனான வணிகம் பாதிக்கப்பட்டுள்ளது. உணவு, பூச்சிக் கொல்லி மற்றும் எரிபொருளுக்காக சீனாவையே வட கொரியா நம்பியுள்ளது.

இதேவேளை, நாடு மிக மோசமான நிலையை எதிர்கொண்டுவருவதாக வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன் தெரிவித்ததாக அந்நாட்டு அரச ஊடகங்கள் கடந்த வாரம் செய்தி வெளியிட்டன.

இந்த நிலையிலேயே, நிலைமை மோசமடைவதைத் தவிர்க்க வட கொரியா மீது சர்வதேச நாடுகள் விதித்திருக்கும் தடையை தளர்த்துவதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை வழிசெய்ய வேண்டும். அங்கு உடனடி உயிர்காக்கும் உதவிகள் சென்று சேர்வதை உறுதி செய்ய வேண்டும் எனவும் ஐ.நா. அதிகாரி குவாண்டானா தெரிவித்துள்ளார். (ஐ)

# 2025இல் பறக்கும் கார்கள் மக்கள் பயன்பாட்டுக்கு!

லண்டன், ஒக். 15

2025ஆம் ஆண்டு பறக்கும் கார்கள் பயன்பாட்டுக்கு வந்துவிடும் என்று பிரிட்டனின் வெர்டிக்கல் நிறுவனம் ஏரோ ஸ்பேஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

பறக்கும் கார்களை வாங்குவதற்கு ஜப்பானின் மரு பெனி நிறுவனம் 200 கார்களுக்கு ஒப்பந்தம் பெற்றுள் ளது. வெர்டிக்கல் ஏரோ ஸ்பேஸ் நிறுவனம் 1350 பறக்கும் கார்களுக்கான ஒப்பந்தத்தை - 400 கோடி ஸ்ரேலிங் பவுண்ஸ் - நம் நாட்டு மதிப்பில் சுமாராக ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 600 கோடி ரூபாய் ஒப்பந்தங்களை செய்துள்ளது.




வெர்டிகல் ஏரோ ஸ்பேஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி ஸ்டீபன் பிட்ஸ்பட்ரிக் இது குறித்து கூறுகையில், ”2025 இல் இந்த பறக்கும் கார்கள் மக்கள் பயன்பாட்டுக்கு வந்துவிடும். இதற்காக அமெரிக்காவின் பிளாங்க்செக் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளோம். 193 கி. மீ .தூரம் வரை, சுமார் 4 பேரை ஏற்றிச் செல்லும் இந்த பறக்கும் கார் திட்டத்தில் உலகின் முன்னணி நிறுவனங்கள் பலவும் முதலீடு செய்ய முன்வந்துள்ளன. ஏவவான், ஹனிவெல், ரோல்ஸ்ராய்ஸ் மற்றும் மைக்ரோ சொப்டின் எம் 12 ஆகியன முதலீடு செய்ய முன்வந்துள்ளன.

பறக்கும் கார்களுக்கு உரிமம் பெறு வது ஐரோப்பிய ஒன்றியத்தின் வான்வழி பயண பாதுகாப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டு அமையும். இந்த பறக்கும் காரின் தொழில்நுட்பங்கள்தான் புதிது. ஆனால், இயக்குவதற்கான வழிமுறைகள் ஒரு விமான இயக்கத்துக்கு நிகரானது. ஹீத்ரூ விமான நிலையத்துடன் இது தொடர்பாக ஆலோசனையில் உள்ளோம்” என்றார். (ஐ)



# தாய்வானில் தீ விபத்து; 46 பொதுமக்கள் மரணம்!

தைபே, ஒக். 15

தாய்வானில் உள்ள கௌஷியாங் நகரில் இருக்கும் 13 மாடி கட்டடம் ஒன்றில் நடந்த தீ விபத்தில் குறைந்தது 46 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை தீ விபத்து நடந்த இந்த கட்டடம் அடுக்குமாடி குடியிருப்பாகவும் வர்த்தக வளாகமாகவும் இயங்கியது என்று உள்ளூர் தீயணைப்புத் துறை தெரிவித்துள்ளது.

உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை நேரத்தில் உண்டான தீயை அணைக்க 4 மணி நேரத்திற்கும் மேல் ஆனது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்தில் 46 பேர் உயிரிழந்தனர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள 79 பேரில் 14 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை தெரியவில்லை. தீ விபத்து ஏற்பட முன்பு அங்கு ஒரு பெரிய வெடிப்பு சத்தத்தைக் கேட்டதாக அப்பகுதியில் குடியிருப்பவர்கள் தெரிவித்தனர். (ஐ)

# பாராளுமன்றம் கலைப்பு; 31இல் ஜப்பானில் தேர்தல்!

ரோக்கியோ, ஒக். 15

புதிய பிரதமர் புமியோ கிஷிடாவின் உத்தரவின் பேரில் நேற்று ஜப்பான் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

அத்துடன், எதிர்வரும் 31ஆம் திகதி புதிய பாராளுமன்றத்தை தெரிவு செய்தவற்கான பொதுத் தேர்தலுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 19ஆம் திகதி முதல் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளன.

தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை சிறப்பாக சரிசெய்யக்கூடியவர்கள் யார்? என்பதை தேர்தலில் மக்கள் தீர்மானிக்க முடியும் என பிரதமர் புமியோ கிஷிடா நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

“நாங்கள் என்ன செய்ய விரும்புகிறோம் என்பதை செயலில் காண்பிக்க விரும்புகிறோம். இதற்கு பொதுத் தேர்தலை பயன்படுத்த விரும்புகிறோம் எனவும் அவர் தெரிவித்தார். பிரதமர் பொறுப்பேற்று கடந்த 11 நாட்களும் நான் மிகவும் பரபரப்பாக இருந்தேன். எனினும் நான் சோர்வடையவில்லை . நிறைவாகவே உணருகிறேன் - என்றும் அவர் மேலும் கூறினார்.



# ஆறு வாரங்களில் நியூசிலாந்தில் கொரோனா தொற்று அதிகரிப்பு

ஒக்லாந்து, ஒக். 15

கடந்த ஆறு வாரங்களில் கோவிட் -19 நோய்த்தொற்றின் மிகப்பெரிய அதிகரிப்பை நியூசிலாந்து நேற்று அறிவித்தது.

அனைத்து கொரானா தொற்றாளர்களும் ஒக்லாந்தில் கண்டறியப்பட்டுள்ளனர். இதனால் அடுத்த வாரத்தின் பின்னரும் நாட்டின் மிகப்பெரிய நகரமான ஒக்லாந்துக்கான முடக்கல் கட்டுப்பாடுகள் மேலும் நீடிக்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது.

நியூசிலாந்தில் மொத்தம் 71 புதிய தொற்றாளர்கள் வியாழன்று அடையாளம் காணப்பட்டனர். இவை அனைத்தும் ஒக்லாந்தில் பதிவானவையாகும். டெல்டா பரவலுக்கு மத்தியிலும் நியூசிலாந்தில் 4, 472 உறுதிப்படுத்தப்பட்ட கோவிட்-19 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். அத்துடன், 28 உயிரிழப்புகள் அங்கு இடம்பெற்றுள்ளன.

வெகுஜன தடுப்பூசி திட்டத்தன் கீழ் அங்கு சுமார் 24 இலட்சத்து 90 ஆயிரம் பொது மக்கள் முழுமையாக தடுப்பூசிளை பெற்றுள்ளனர்.

ஈழநாடு






## ஐ. பி. எல். இறுதி போட்டி

# சென்னை - கொல்கத்தா இன்று பலப்பரீட்சை!

டுபாய், ஒக். 15

ஐ. பி. எல். இருபது - 20 தொடரில் இன்று வெள்ளிக்கிழமை நடக்கும் இறுதிப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் - கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிகள் மோதவுள்ளன.

டோனியின் தலைமையின் கீழ் நான்காவது முறையாக பட்டத்தை வெல்லும் முனைப்பில் சென்னை உள்ளது. அதேநேரத்தில் மூன்றாவது முறையாக சம்பியனைக் கைப்பற்றும் நோக்கில் கொல்கத்தா களமிறங்குகிறது.

2012ஆம் ஆண்டு நடந்த ஐ. பி. எல். தொடரின் இறுதிப் போட்டியில் இரு அணிகளும் மோதின. அந்தப் போட்டியில் 5 விக்கெட்களால் கொல்கத்தா அணி வென்று சம்பியனை கைப்பற்றியது.

சென்னை அணியின் பலமே அந்த அணியின் 40 வயதான தலைவர் டோனிதான். இம்முறை, அனைவரும் இவர்மீது அதிக கவனம் செலுத்தியுள்ளனர். இது அவரின் இறுதி ஐ. பி. எல். தொடராக இருக்குமா அல்லது 2022 போட்டியிலும் பங்கேற்பாரா என்ற சந்தேகம் உள்ளது.

இம்முறை தொடரில் மொயின் அலி துடுப்பாட்டத்தில் சாதிக்கவில்லை. எனினும், அவர் பந்துவீச்சில் சிறப்பாக செயல்பட்டுள்ளார்.

சென்னையின் தொடக்க வீரரான கெய்க்வாட் 603 ஓட்டங்களை இந்தத் தொடரில் குவித்துள்ளார். அவர், பஞ்சாப் கிங்ஸின் கே. எல். ராகுலை முறியடிக்க 24 ஓட்டங்களே அவருக்கு தேவையாக உள்ளது.

கொல்கத்தா அணியைப் பொறுத்தவரை அதன் பலம் சுனில் நரைன், இயன் மோர்கன், வெங்கடேஷ் ஐயர் ஆகியோரே. அந்த்ரே ரஸல் கடைசி ஆறு போட்டிகளை தவறவிட்டதால் இறுதி போட்டியில் பங்கேற்பது சந்தேகமே.

சுனில் நரைன் அதிரடியான துடுப்பாட்டம், பந்துவீச்சில் சிறப்பாக உள்ளார். நட்சத்திர அந்தஸ்து வீரராக வலம் வரும் அவர் வெளியேற்றும் போட்டியில் பெங்களூர் அணிக்கு எதிராக செயல்பட்ட விதம் அவரால் போட்டியின் முடிவை திசை திருப்ப முடியும் என்பதை காட்டியுள்ளது.

மோர்கன் துடுப்பாட்டத்தில் தடுமாறுகிறார். எனினும், அவரின் அமைதியான தலைமைத்துவம் அதிமுக்கியமானது. டோனிக்கு எதிரான தந்திரத்தை வகுக்கக்கூடியவராக அவர் உள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் தொடக்க வீரராக சிறப்பாக செயல்பட்டுள்ளார் வெங்கடேஷ் ஐயர்.

ஐ. பி. எல்லில் 11 தொடர்களில் விளையாடியுள்ளது சென்னை அணி. 3 தடவை சம்பியனாகியுள் ளது. 5 முறை இரண்டாவது இடத் தையும் பிடித்துள்ளது. கொல்கத்தா 13 தொடர்களில் விளையாடி இரு தடவைகள் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. (ஐ)

# இந்தியன் வெல்ஸ் ரென்னிஸ் அசரென்கா அரையிறுதியில்!



கலிபோர்னியா, ஒக். 15

இந்தியன் வெல்ஸ் தொடரில் விக்ரோறியா அசரென்கா, ஒஸ்ராபென்கோ ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறினர்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் இந்தியன் வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில், நேற்று நடந்த இரு காலிறுதிப் போட்டிகள் நடந்தன.

முதல் காலிறுதி போட்டியில் அமெரிக்காவின் ரோஜர்ஸை லத்வேனியாவின் ஒஸ்ராபென்கோ எதிர்த்து ஆடினார். இதில் ஒஸ்ராபென்கோ, 6- 4, 4 -6, 6 -3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதியில் பெலாரஸின் விக்ரோறியா அமெரிக்காவின் பெகுலாவை எதிர்கொண்டார். இதில் 6 -4, 6- 2 என்ற செற் கணக்கில் விக்ரோறியா இலகுவாக வெற்றி பெற்றார். (ஐ)

# கொல்கத்தா அணி இறுதிக்கு தகுதி

சார்ஜா, ஒக். 15

வெங்கடேஷ் ஐயர் - சுஷப்மன் கில்லின் வலுவான ஆரம்பத்துடன் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் டில்லி கப்பிடல்ஸ் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

2021 இந்தியன் பிறீமியர் லீக்கில் இறுதிப் போட்டிக்கான 2ஆவது தகுதிச்சுற்று போட்டி நேற்று முன்தினம் இரவு சார்ஜாவில் நடந்தது.

இதில், ரிஷப் பந்த் தலைமையிலான டில்லி கப்பிடல்ஸ் மற்றும் இயன் மோர்கன் தலைமையிலான கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதனால், டில்லி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆரம்ப வீரர்களான பிரித்வி ஷா 18, தவான் 36 ஆகியோர் ஓரளவிற்கு ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தனர். அதன்பின் வந்த ஸ்ரொய்னிஸ் 23 பந்தில் 18 ஓட்டங்களை எடுத்து வெளியேறினார். ரிஷப் பந்த் 6 ஓட்டங்களுடனும், ஹெட்மேயர் 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

ஷ்ரேயாஸ் ஐயர் கடைசி வரை ஆட்டமிழக்காமல் 27 பந்துகளில் 30 ஓட்டங்களை பெற டில்லி அணி 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 135 ஓட்டங்களை எடுத்தது.

136 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா அணி களமிறங்கியது. தொடக்க வீரர்களான ஷுப்மன் கில், வெங்கடேஷ் ஐயர் ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இந்த இணை முதல் விக்கெட்டுக்காக 12.2 ஓவர்களில் 96 ஓட்டங்களை குவித்தது.

அரைச்சதம் அடித்த வெங்கடேஷ் அய்யர் 41 பந்துகளில் 55 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து ஷுப்மன் கில் உடன் நிதிஷ் ராணா இணைந்தார். அணியின் ஓட்ட எண்ணிக்கை 16 ஓவரில் 123 ஓட்டங்களாக இருக்கும்போது நிதிஷ் ராணா 12 பந்துகளில் 13 ஓட்டங்களை எடுத்து வெளியேறினார்.

அப்போது கொல்கத்தா அணிக்கு 4 ஓவர்களில் 13 ஓட்டங்களே தேவைப்பட்டது. இந்தநிலையில் ஷுப்மன் கில் 46 பந்துகளில் 46 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

கொல்கத்தா அணிக்கு கடைசி இரண்டு ஓவரில் 10 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

19 ஆவது ஓவருக்காக நோரட்ஜே பந்து வீசினார். இந்த ஓவரில் 3 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட் வீழ்த்தினார் நோர்ட்ஜே.

இதனால் கடைசில் ஓவரில் 7 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அஷ்வின் கடைசி ஓவரை வீசினார். முதல் பந்தில் திரிபாதி ஓர் ஓட்டம் பெற்றார். 2 ஆவது பந்தில் ஓட்டம் எடுக்கவில்லை. 3 ஆவது பந்தில் ஷகிப் அல் ஹசன் ஆட்டமிழந்தார். 4 ஆவது பந்தில் சுனில் நரைன் ஆட்டமிழந்தார்.

இதனால் கடைசி 2 பந்துகளில் 6 ஓட்டங்கள் தேவைப்பட்டன. 5 ஆவது பந்தில் திரிபாதி சிக்ஸர் விளாசினார். இதனால் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் 19.5 ஓவரில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 136 ஓட்டங்களை எடுத்து டில்லியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

போட்டியின் ஆட்ட நாயகனாக வெங்கடேஷ் ஐயர் தெரிவானார். (ஐ)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 12 - 07 - 1946

உதிர்வு 17 - 09 - 2021

### திருமதி மார்க்கண்டு பரமேஸ்வரி

கடந்த 17.09.2021 வெள்ளிக்கிழமை எமது தாய் காலமானார். அன்னார் கணபதி - பிள்ளைமுத்துவின் பாசமிகு மகளும், கணபதி - மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், விஜயகோபால் (சுவிஸ்), சுரேஸ்குமார் (ஜேர்மனி), ஜெயகுமாரி (யாழ்ப்பாணம்), ரகுலகுமார் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான தனிஸ்குமார், ரகுலகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சர்மினி, மயூரா, நவீந்திரராசா, சர்மினி (சைய்தா) ஆகியோரின் மாமியாரும், ஹம்ஷிகா, சன்றிலான், சுவேக்கா, சுவேந்த், மனாசே, அபிசாந்த் ஆகியோரின் அன்பு பாட்டியும், குணேஸ்வரியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கமலநாதனின் அன்பு மைத்துனியும் ஆவார்.

**அன்னாரின் பிரிவுச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் தமது அனுதாபங்களை தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகளுக்கும் அனைத்து வழிகளிலும் ஓடிவந்து உதவி புரிந்த அன்பு உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

இன்று கீரிமலையில் (15.10.2021) வெள்ளிக்கிழமை இடம்பெறும் அந்தியேட்டி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து (17.10.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னையைப் போல் ஒரு தெய்வம் இல்லை
அவர் அடிதொழ மறுப்பவர் மனிதரில்லை
பத்துமாதம் அன்னை சுமந்து
அம்புலிகாட்டி, அமுதினை ஊட்டி,
அன்பை பொழிந்து ஆசையில் வளர்த்த என் தாயார்.

இல.150, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். T.P:077 199 3933

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

மலர்வு 14 - 08 - 1925



உதிர்வு 12 - 10 - 2021

### சங்கரப்பிள்ளை யோகராஜா

*(இளைப்பாறிய சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு மற்றும் முன்னாள் சிரேஷ்ட தொழில் அதிகாரி- இலங்கை தொழில் திணைக்களம்)*

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், சிட்னியை வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை யோகராஜா 12.10.2021 செவ்வாய்க் கிழமை அன்று சிட்னியில் காலமானார்.

அன்னார், சண்டிலிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சபாரட்னம் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற Dr. பேர்ள் அரியமலரின் அன்புக் கணவரும், ஜெயந்தா (பொறியியலாளர்- பேர்த்), அஜித்குமார் (பொறியியலாளர்-சிட்னி), மதுரா (NSW Ambulance Services) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,காலஞ்சென்ற லலிதா, சாந்தி, லலிதாம்பிகை, மகாதேவ் ஆகியோ ரின் அன்பு மாமனாரும், சபரிகா, சபரேஸ், அரவிந்தன், அனீற்றா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், கந்தையா, ஞானசவுந்தரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

*கிரியை*
Saturday, 16 Oct 2021 9:30 AM - 12:15 PM
Rookwood Memorial Gardens and Crematorium South Chapel Memorial Ave, Rookwood NSW 2141, Australia

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**அஜித்குமார் (மகன்) : + 61427785062**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# அச்சுறுத்தலால் நாட்டைவிட்டு வெளியேற தமிழர்கள் முயற்சி

## கனடிய தூதுவரிடம் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

**கிளிநொச்சி, ஒக். 15**

**'தமிழ் இளைஞர்கள் அரச புலனாய்வு அச்சுறுத்தல்களால் நாட்டைவிட்டு வெளியேற எத்தனிக்கின்றார்கள்.'**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இலங்கைக்கான கனடியத் தூதுவரிடம் தெரிவித்தார்.**



இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மக்கினான், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை அவரது காரியாலயத்தில் நேற்று சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போதே பாராளுமன்ற உறுப்பினரால் தமிழர்கள் தற்போது அரச இயந்திரங்களால் நசுக்கப்படும் முறை தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

தமிழர்கள் தமது உணர்வு பூர்வமான நினைவுகளை மேற்கொள்வதற்கு இப்போது இருக்கும் அரசு கொரோனாவைக் காரணம் காட்டி தடைகள் விதிப்பது தொடர்பாகவும், அதனை மீறி நினைவேந்தல்கள் இடம்பெற்றால் புலனாய்வாளர்கள் மூலமாக நினைவேந்தலில் கலந்துகொண்டவர்களை அச்சுறுத்துவது தொடர்பாகவும் சிறீதரன் எம்.பி. எடுத்துரைத்தார்.

இதேவேளை, அரசு பாரிய விழாக்களை எந்தவித தடைகளும் இன்றி நடத்துவது குறித்தும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அரச புலனாய்வாளர்களின் அச்சுறுத்தலாலும், தமிழ் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதில் உள்ள பின்னடைவாலும் இலங்கையில் வட பகுதியில் உள்ள தமிழ் இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், தொல்பொருள் என்ற போர்வையில் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுவது தொடர்பாகவும், தமிழர்களின் பூர்வீக அடையாளங்களை அழித்து பௌத்த சிங்கள அடையாளங்களைத் திணிப்பது தொடர்பாகவும் இதன்போது சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, மாகாண சபைகளினுடைய அதிகாரத்துக்குள் இருக்கின்ற பாடசாலைகள், வைத்தியசாலைகளின் அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றன என்றும், வெளியில் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் மட்டும் பேசிக் கொண்டு இருக்கும்போது இருக்கின்ற அதிகாரங்களையும் இலங்கை அரசு மாகாணங்களிடம் இருந்து பறித்துக்கொண்டு இருக்கின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இதுவரை மாகாண அரசின் அதிகாரத்துக்குட்பட்ட வடக்கு மாகணங்களில் உள்ள மாவட்ட வைத்தியசாலைகளின் கட்டுப்பாடுகளை இலங்கை அரசு தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதுடன் மாகாண பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக ஆக்குவதன் ஊடாகவும் தமிழர்களின் அதிகாரம் பறிக்கப்படுகின்றது எனவும் கனேடியத் தூதுவருக்குச் சிறீதரன் எம்.பி. தெரியப்படுத்தினார்.

கனடிய தேசிய விழாவில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டதற்கும், ஜெனிவா தீர்மானங்களில் கனடிய அரசு மேற்கொண்டுவரும் ஒத்துழைப் புகளுக்கும் கனடிய அரசுக்கு சிறீதரன் எம்.பி. நன்றி தெரிவித்தார்.

கனடிய அரசு மனிதாபிமானத்துடனும் பக்கர்ச்சார்பு இன்றியும் தொடர்ந்தும் செயல்படும் எனவும், ஜெனிவா தீர்மானங்களுக்கு கனடிய அரசு ஒத்துழைப்புத் தரும் எனவும் கனடியத் தூதுவர் டேவிட் மக்கினான் வழங்கிய உறுதிமொழியோடு கலந்துரையாடல் சுமூகமாக நிறைவடைந்தது. (இ)

## பல்கலை மாணவர் ஒன்றியம் ஆர்ப்பாட்டம்



*கொழும்பு, ஒக். 15*

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் உள்ளிட்ட குழுவினரை விடுதலை செய்யுமாறு கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அரசுக்கு எதிரான பல்வேறு விதமான கோஷங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பினர். (இ)

## பெண் குழந்தை சடலமாக மீட்பு!

*சாவகச்சேரி, ஒக். 15*

இரவு பால் குடித்து விட்டு தூங்கிய ஒன்றரை மாதப் பெண் குழந்தை ஒன்று படுக்கையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த குழந்தை அசைவற்றுக் காணப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு குழந்தையை எடுத்துச் சென்ற நிலையில் ஏற்கனவே குழந்தையின் உயிர் பிரிந்து விட்டது என உறுதிப்படுத்தப்பட்டது.பள்ளிவளவு, தனங்கிளப்பு வீதி யைச் சேர்ந்த அபூ ஹூரைறா ஹா ஜர் என்ற பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது. (இ - 03)



### தமிழ்...

நேற்று வியாழக்கிழமை மன்னாரில் அவரின் அலுவலகத்தில் நடத்திய செய்தி யாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை மைப் பதவி தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்த கருத்துத் தொடர்பில் செய்தியாளர் களின் கேள்விக்கு பதிலளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளி கட்சி யான ரெலோவின் தலைவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற் போதைய தலைவராக உள்ள பாராளு மன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனுக்கு பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை என்பது கூட்டுத்தலைமையாக இருக்கும். தமிழ் தேசியக் கூட்டமைப் பின் தலைமையை தான் ஏற்க தயார் என பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந் திரன் தெரிவித்த கருத்து அவரின் தனிப் பட்ட கருத்து. அதை ஏற்பதா? இல்லையா? என்பதை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முடிவெடுக்கும். சம்பந்தனின் காலத்தின் பின் கூட்டுத்தலைமையாக தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு செயல்படும். அவரின் தனிப்பட்ட கருத்தை பெரிய விடயமாக பார்க்கத் தேவையில்லை.

இந்தியாவின் அழுத்தம் காரணமாக மாகாண சபை தேர்தலை நடத்தவுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது. மாறிமாறி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை தெரிவிக்கிறார்கள். அரசியல் சாசனம் திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர்தான் தேர்தல் இடம்பெறும் எனக் கூறுகிறார் கள். அடுத்த வருடம் தேர்தலை நடத்த உள்ளதாகவும் தெரிவிக்கின்றார்கள். புதிய தேர்தல் முறையில்தான் தேர்தல் நடத்த வேண்டும் என்று தெரிவிக்கின் றார்கள். இவர்களின் கருத்துக்கள், பிரத மர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது டில்லிக்கு செல்லும்போது 13ஐ விட அதிகாரங்களை கூடுதலாக அளிப்பதாக - 13 பிளஸ் என்று சொல்லி, வெளியில் வந்த பின் 13ஐ கொடுக்க முடியாது என்று பேசுகின்ற சந்தர்ப்பங் கள்போல் உள்ளன.

மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் எங்களுடைய கோரிக்கை பிரதானமானதாக உள்ளது. அதே நேரத்தில் 13ஆவது திருத்தச் சட் டத்தில் கூறப்படுகின்ற அனைத்து விட யங்களையும் நடைமுறைப்படுத்துகின்ற ஒரு வழியை கையாளுகின்ற முறைமையை இந்தியா செய்ய வைக்க வேண்டும் என் பது எமது கோரிக்கை.

அதிகாரம் இல்லாத மாகாண சபையை நாங்கள் ஏற்றுக் கொண்டு அதனூடாக எங்களின் நிலங்களை பாதுகாப்பது மற் றும் எமது பிரச்னைகளை கையாள்வது என்பது மிக ஒரு கேலித்தனமான விட யமாக நாங்கள் பார்க்கின்றோம். எனவே, 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமை யாக நடை முறைப்படுத்தியதன் பின்னர் மாகாண சபை தேர்தலை நடத்துவது என்பதுதான் சிறந்ததாக அமையும். இந் தியா இவ்விடயத்தில் முனைப்புடன் செயல் பட வேண்டும் என்று கோருகிறோம்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய பிரவேசம் கட்டுப்படுத்தப்பட்ட வேண் டும். மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா எமது மீனவர்களை காப்பாற்ற வேண்டிய நடவடிக்கையில் இறங்க வேண்டும். அதற்கான நடவடிக்கைளை அவர் எடுக்கும் போது அவருடன் சேர்ந்து செயல்பட தயாராக இருக்கிறோம். பாதிக்கப்பட்ட எமது மீனவர்களுக்கு உரிய நட்டஈடு வழங்கப்பட வேண்டும்.

எனவே எதிர்வரும் காலங்களில் இவ் வாறான சம்பவங்கள் இடம் பெறாமல் இருக்க திட்டத்தை வகுத்து செயல்படு வதே சாலச் சிறந்தது.

விவசாயிகள் தமது நகைகளை அடகு வைத்தும், வங்கி கடன்களை பெற்றுமே விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக் கின்றனர். தற்போது விவசாய நடவடிக் கைகளை மேற்கொள்ளும் காலமாக உள் ளது. ஆனால், உரம் இல்லை - மருந்து இல்லை. இவ்வாறான சூழ்நிலையில் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் தேவைக்கான உணவுக்குக் கூட பிரச்னை ஏற்படும் நிலை உள்ளது. இலங்கை பெரும் பஞ்சத்தை ஏற்படுத் தும் நிலை உள்ளது. விவசாயிகளுக்கு உரம் வழங்கி விவசாயத்தை ஊக்குவிக் கும் செயலை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

### சுகாதார...

கப்படும் நபர்களின் எண்ணிக்கை 25சத வீதம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, அதிகபட்ச நபர்களின் எண் ணிக்கை 50ஆக வரையறுக்கப்பட்டுள் ளது.

திருமண மண்டபத்தில் மதுபான பாவ னைக்கு விதிக்கப்பட்ட தடை தொடரும். அனைத்து திருமணங்களும் பதிவு திரும ணங்களாக மாத்திரமே நடத்த முடியும்.

இறுதிச்சடங்கில் ஒரேநேரத்தில் கலந்து கொள்ளக் கூடியவர்களின் எண்ணிக்கை, 15ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், உணவ கங்களில் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு ஏற்பட 30 வீதம் வரையானவர்கள் அமர்ந் திருந்து உணவருந்த முடியும். மதுபானத் துக்கான தடை தொடரும்.

இதேவேளை, கூட்டங்கள், பயிலரங் குகள், கருத்தரங்குகள் போன்றவற்றில் அதிகபட்சம் 50 பங்கேற்பாளர்கள் கொண் டதாக மண்டபத்தில் நடத்தலாம். (ஐ)

### அரசின்...

ணத்தில் கலந்துகொண்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எக்ஸ் - பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்தால் மீனவர் சமூகத்துக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு இழப்பீடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

அரசு, பன்னாட்டு நிறுவனங்களின் கைப்பொம்மையாக மாறிவிட்டது. நாட் டில் உள்ள மீனவ சமூகத்தின் உரிமை களை வெளிநாட்டு டொலர் தரகர்களி டம் ஒப்படைத்துள்ளது.

நாட்டின் மீன்பிடித் தொழிலில் புரட்சி கர மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்" - என்றார்.

அம்பலாங்கொடை மீன்பிடித் துறை முகத்தை அண்டியுள்ள மீனவர் சமூகத்தை எதிர்க்கட்சித் தலைவர் நேற்று சந்தித்து அவர்களின் பிரச்னைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடினார்.

இதன்போது, மீனவர்கள் தமது பிரச் னைகளைக் கூறி ஆர்ப்பாட்டத்திலும் ஈடு பட்டனர். (இ)

### 673 தொற்றாளர்கள்...

ரத்து 754 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற் றால் பாதிக்கப்பட்ட மேலும் 366 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 91 ஆயிரத்து 604 ஆக உயர்வடைந்துள்ளது.

### கொரோனா...

இந்த மரணங்களில் 06 பெண்களும், 15 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 429 ஆக அதி கரித்துள்ளது. (இ)

### ஆசிரியர்களின்...

காலக்கெடு விதித்து, அறிவிப்பை வெளி யிட்டார்.

"சம்பள முரண்பாடு தொடர்பில் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டத்தை ஏற்கமுடியாது. சுபோ தினி அறிக்கையை செயற்படுத்துமாறு கோரியுள்ளோம். அது தொடர்பில் தெளி வான பதில் 21 ஆம் திகதிக்கு முன்னர் அவசியம். அதுவரை எமது போராட் டம் தொடரும்.

அவ்வாறு தீர்வு இல்லையேல், 21 ஆம் திகதிக்கு பிறகும் போராட்டத்தை தொடர்வது குறித்து தீர்மானம் எடுக்கப் படும்." - எனவும் அவர் கூறினார்.

# கொரோனா தொற்றுக்குள்ளான அரச ஊழியர்களுக்கு இழப்பீடு!

## பிரதமர் மஹிந்த பணிப்புரை

கொழும்பு, ஒக். 15

கோவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டு வீடுகளில் சிகிச்சை பெற்றுவரும் அரச ஊழியர்களுக்கு அக்ரஹார காப்புறுதி நிதியிலிருந்து இழப்பீடுகளை பெற்றுக் கொடுக்கும் வகையிலான திட்ட மொன்றை வகுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன் தினம் பிற்பகல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறி வுறுத்தினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தொழிற்சங்கம் மற்றும் ஒருங்கிணைந்த தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரை யாடலின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அரச சேவையை செயற் திறன் மிக்கதாக மாற்றவேண்டியதன் அவசியம் குறித்து தொழிற்சங்கத்தினர் பிரதமரிடம் எடுத்துரைத்தனர்.

அரச நிறுவனங்களின் செயற்திறன் மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்த வேண்டும் என சுட்டிக்காட்டிய பிரதமர், அதற்கு பொறுப்புவாய்ந்த அதிகாரி களின் செயற்பாடு அவசியம் எனவும் குறிப்பிட்டார்.

அதற்கு அரச ஊழியர்களுக்கான தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான பயிற்சி நடவடிக்கைகளுக்கான வாய்ப்பு களை அதிகரிக்கவேண்டும் எனவும் பிரத மர் தெரிவித்தார்.

2016ஆம் ஆண்டின் பின்னர் அரச சேவையில் இணைந்து கொண்டவர்கள் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின்போது இழந்த ஓய்வூதிய கொடுப்பனவை மீண் டும் பெற்றுக் கொள்வது தொடர்பில் தொழிற்சங்க பிரதிநிதிகள் இதன்போது கருத்து தெரிவித்தனர்.

இது தொடர்பில் ஆராயுமாறு பிரத மர், அரச சேவைகள் அமைச்சின் செய லாளருக்கு அச்சந்தர்ப்பத்திலேயே தெரி வித்தார். வாழ்க்கை செலவு அதிகரிப் பதற்கு ஏற்ப ஓய்வூதிய கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

ரயில் திணைக்களத்தின் கொள்முதல் களில் காணப்படும் சில முறைகேடுகள் தொடர்பிலும் இதன்போது தொழிற் சங்க பிரதிநிதிகள் பிரதமருக்கு விளக்க மளித்தனர்.

கோவிட் தொற்று காரணமாக நாட் டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ள இச்சூழலில் அரச நிறுவனங்களின் செலவு களை மட்டுப்படுத்துவது தொடர்பில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரி வித்த பிரதமர், ரயில் திணைக்களத்தி னுள் காணப்படும் முறைகேடுகள் தொடர் பில் ஆராயுமாறும் குறிப்பிட்டார்.

# கொடும்பாவி எரித்தாலும் பின்வாங்கவே மாட்டேன்!

## மஹிந்தானந்த திட்டவட்டம்



கொழும்பு, ஒக். 15

"இலங்கை அரசியல் வரலாற்றிலேயே அதிகளவு திட்டு வாங்கிய விவசாயத் துறை அமைச்சர் என்ற பட்டியலில் இணைந்துள்ளேன். என்னை எப்படிதான் திட்டி தீர்த்தாலும், எனது கொடும்பாவி களை எரித்தாலும் முன்வைத்த காலை நான் பின்வைக்கப்போவதில்லை." - என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந் தனாந்த அளுத்கமகே சூளுரைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறி யவை வருமாறு:

இயற்கை விவசாயத்தை நோக்கிப் பயணிக்கும் கொள்கையில் நான் உறுதி யாக இருக்கின்றேன். விவசாயிகளின் வாழ்வாதாரம் மட்டுமல்ல அவர்களின் உடல் ஆரோக்கியமும் எனக்கு முக்கி யம். அவர்களின் சிறுநீரகங்களையும் பாதுகாக்கவே நான் போராடுகின்றேன்.

என்னை எப்படிதான் விமர்சித்தா லும், உருவ பொம்மைகளை எரித்தாலும் பின்வாங்கமாட்டேன்- என்றார்.

அதேவேளை, உரத் தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து விவசாயத்துறை அமைச்சருக்கு எதிராக நாட்டில் பல பகுதிகளில் நேற்றைய தினமும் போராட் டம் முன்னெடுக்கப்பட்டது.

### ரிஷாத் பிணையில்...

ருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. ஹிஷா லினியின் உயிரிழப்பு தொடர்பிலான வழக்கில் 10 இலட்சம் ரூபாய் பெறுமதி யான இரண்டு சரீரப் பிணைகளில் அவரை விடுதலை செய்வதற்கு கொழும்பு மேல திக நீதிவான் ரஜீந்திர ஜயசூரிய உத்தர விட்டார்.

எவ்வாறாயினும், ரிஷாத் பதியுதீன் வெளிநாட்டு பயணங்களை மேற்கொள் வதற்கு மேலதிக நீதிவான் தடை விதித்துள் ளார். இந்த வழக்கு தொடர்பிலான அனைத்து விசாரணைகளும் நிறைவடைந் துள்ளதாக, சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகிய அரச சிரேஷ்ட சட்டத்தரணி ஹங்ச அபேரத்ன மன்றில் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பிரதிவாதி தரப்பினால் முன்வைக்கப்பட்ட பிணை கோரிக்கையை பரிசீலித்த மேலதிக நீதவான் பிணை வழங்கி உத்தரவிட்டார்.

இதேவேளை, ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான வழக்கிலும் அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. பயங்கர வாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டிருந்தார். இந்த வழக்கில் 50 இலட்சம் ரூபாய் பெறுமதி யான இரண்டு சரீரப் பிணைகளில் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு தொடர்பில், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை குற்றப்புல னாய்வு திணைக்களத்தில் ஆஜராகுமாறு ரிஷாத் பதியுதீனுக்கு நீதிவான் உத்தர விட்டுள்ளார். பிரதிவாதி தரப்பினர் முன் வைத்த பிணைக் கோரிக்கைக்கு பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்ன கோன் எதிர்ப்பு தெரிவிக்காததால், நீத வான் பிணை வழங்கி உத்தரவிட்டார்.

### ஈரான் கைதிகள்...

அனைவரும் ஈரானிய கைதிகள் என்றும், இருவர் உயிரிழந்த நிலையில் ஏனைய 10 பேருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இவர்கள் அனை வரும் போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த கைதிகளைப் பார்வையிடு வதற்காக நேற்று முன்தினம் சென்ற ஈரான் தூதரக அதிகாரிகளே, தொற்று நீக்கி திரவத்தை வழங்கியுள்ளாரென சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அடக்குமுறைகளை கைவிடுங்கள் இயல்பு வாழ்க்கைக்கு வழிவிடுங்கள்

## அரசிடம் சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை

*யாழ்ப்பாணம், ஒக். 15*

இலங்கை அரசு வடக்கு, கிழக்கு பகுதிகளில் மீண்டும் விசாரணை என்ற பெயரில் அச்சுறுத்தல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்றும், இந்தச் சந்தேகத்தைப் போக்கும் வகையில் அரசு நடந்துகொள்ள வேண்டும் என்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

"கடந்த புதன்கிழமை (13.10.2021) அன்று கிளிநொச்சி மாவட்டத்தின் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயல்பாட்டாளரான ஐயாத்துரை குகனைக் கிளிநொச்சி இரணைமடு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த புலனாய்வுப் பிரிவினர் என்று கூறிக் கொண்டவர்கள் அவரது இல்லத்துக்குச் சென்று அவரை இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். எந்தவித குற்றச்சாட்டும் இல்லாத ஒரு சூழலில், அவர் ஒரு ஜனநாயக ரீதியிலான அரசியல் கட்சியின் செயல்பாட்டாளர் என்று தெரிந்துகொண்டு அவரது சமூக சேவையை தடுத்து நிறுத்தும் வகையிலும், அவரை அச்சுறுத்தும் வகையிலும் புலனாய்வுப் பிரிவினர் நடந்துகொண்டமை கண்டிக்கத்தக்கது.

பொலிஸாரோ அல்லது அவர்களது புலனாய்வுப் பிரிவினரோ ஒருவர் மீது குற்றச்சாட்டு இருக்கும் பட்சத்தில் விசாரிப்பது இயல்பானது. அது அவர்களது கடமையும் கூட. ஆனால், எத்தகைய குற்றச்சாட்டும் இல்லாமல் விசாரணைக்குட்படுத்துவதென்பது அவரையும் அவரது குடும்பத்தையும் அவரது ஜனநாயகபூர்வமான நடவடிக்கைகளையும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் ஒரு நடவடிக்கையாகவே பார்க்க முடிகின்றது.

எமது கட்சி உறுப்பினரான ஐயாத்துரை குகனுக்கோ அல்லது அவரது குடும்பத்தினருக்கோ ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்படுமாக இருந்தால் அதற்கு அரசும் பொலிஸாரும் பொறுப்புக்கூற வேண்டும் என்பதையும் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்துக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தமது ஐந்து நட்சத்திர ஜனநாயகம் பற்றி வக்காளத்து வாங்கி வாய்கிழியப் பேசுபவர்கள் நடைமுறையில் அரசியல் கட்சிகளையும் அவர்களது உறுப்பினர்களையும் விசாரணை என்ற பெயரில் அச்சுறுத்தும் செயற்பாடு மீண்டும் தொடங்கிவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. அதனைப் போன்றே ஒருபுறம் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தப்போகின்றோம் என்று வீரமுழக்கம் இடும் அமைச்சர்கள் மறுபுறத்தில் இத்தகைய ஜனநாயக விரோத செயல்பாடுகளில் இறங்குவதானது கண்டனத்துக்குரிய செயல்பாடாகும்.

நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து இன்றுவரை தமிழ் மக்களின் உரிமைகளை மறுத்து, அவர்களைத் தனிநாடு கோரி ஆயுதம் ஏந்த வைத்தது இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த ஆட்சியாளர்களே. உள்ளங்கை புண்ணுக்கு இதயத்தில் மேற்கொண்ட சத்திர சிகிச்சையின் பயனை நாடு இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

நாட்டின் பொருளாதார வங்குரோத்து நிலையின் காரணமாக ஒட்டுமொத்த நாட்டு மக்களும் தொழிற்சங்கங்களும் வீதியில் இறங்கிப் போராடும் சூழலில், மக்களை பிளவு படுத்தும் நோக்கில் வடக்கு, கிழக்கு மக்களின் மீது அடக்குமுறையையும் அச்சுறுத்தலையும் ஏவிவிடுவதானது நாட்டின் சுபீட்சத்துக்கு எந்தவகையிலும் பலனளிக்காது.

இலங்கை அரசு இத்தகைய தான்தோன்றித்தனமான - கண்டனத்துக்குரிய ஜனநாயக விரோதச் செயல்பாடுகளை உடன் நிறுத்தி மக்களின் இயல்பான வாழ்க்கைக்கு வழிசமைக்க வேண்டும் என்று நாம் கோருகின்றோம்.

இனியாவது சர்வதேசத்தின் நன்மதிப்பைப் பெறுவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்வது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கும்" - என்றுள்ளது.

(இ)




## மரண அறிவித்தல்

**மலர்வு**
**07 - 04 - 1931**



**உதிர்வு**
**11 - 10 - 2021**

### கலாநிதி முத்தையா குமாரசாமி

Educated in St. John's College Jaffna, University of Sri Lanka (Colombo), University of Leeds, England, *இளைப்பாறிய பிரதி அரசாங்க பகுப்பாய்வாளர், இலங்கை அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களம்* (Retired Deputy Government Analyst, The Government Analyst Department of Sri Lanka)

யாழ்ப்பாணம் அரியாலையை பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட முத்தையா குமாரசாமி 11.10.2021 திங்கட்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான குமாரசாமி முத்தையா- நவரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சோமசுந்தரம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கோமதியின் அன்புக் கணவரும், ஸ்ரீசக்தி, ஸ்ரீகுமார், ஸ்ரீபாலகுமார், ஸ்ரீசெல்வகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி அருளம்பலம்(வைத்திய கலாநிதி), மகாதேவா, சிவப்பிரகாசம் மற்றும் ஞானேஸ்வரி மகாதேவா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான தாமோதரம் அருளம்பலம் (வைத்திய கலாநிதி), திலகா மகாதேவா மற்றும் சத்தியபாமா சிவப்பிரகாசம், காலம்சென்ற சம்பந்தர் மகாதேவா ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமகள் ஸ்ரீபாலகுமார், தர்சினி ஸ்ரீசெல்வகுமார், மீரா தெய்வேந்திரா, அமிர்தா பசுபதி (வைத்திய கலாநிதி), காலஞ்சென்ற அருளம்பலம் அசோகன், ஆனந்த் மகாதேவா, அமர்நாத் மகாதேவா, அரவிந்த் மகாதேவா ஆகியோரின் அன்பு மாமனாரும்,தாரணி டார் லிங், கண்ணன் மகாதேவா, மதனி மகாதேவா, மீனா சிவப்பிரகாசம், சுசீலா சிவப்பிரகாசம் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும்,பிரியா ஸ்ரீகுமார், திவ்யா ஸ்ரீகுமார், வித்யா ஸ்ரீகுமார், நாதன் ஸ்ரீகுமார், பாரி ஸ்ரீபால குமார், அழகன் ஸ்ரீபாலகுமார், இனியன் ஸ்ரீபாலகுமார், அர்ச்சன் ஸ்ரீசெல்வகுமார், தன்யா ஸ்ரீசெல்வகுமார் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

*பார்வைக்கு*
Sunday, 17 Oct 2021 1:30 PM - 3:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave>
Markham, ON L3R 5G1, Canada

*கிரியை*
Sunday, 17 Oct 2021 3:30 PM - 4:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave,
Markham, ON L3R 5G1, Canada

*தகனம்*
Sunday, 17 Oct 2021 5:00 PM - 5:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario,
L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தொடர்புகளுக்கு:*
**சிறிசெல்வகுமார் குமாரசாமி (மகன்)**
**+18473130520**

தகவல்:
**குடும்பத்தினர்.**







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலனகள்-
சிவஸ்ரீ.கு.வை.க வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர் இந்து குருமார் அமைப்பு



07.05 மணி : உளவியல் கருத்து-உளவள
துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்:
டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு-
மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை



1.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-பிகில்,பிச்சைக்காரன்
திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான
நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்-
நகைச்சுவை நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்
பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள்
(மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை
நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(யாழ்ப்பாணம்)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்